


இனிய சமுதாயம் எழுகவே!

கலைஞர் மு.கருணாநிதி



அன்புடன்,

யொன்-நாகமுண்ணக்கம்.

நகர அமைப்புரை

உருமணை

இளைய சமுதாயம் எழுகவே

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

கலைஞர் மு. கருணாநிதி

திருமகள் நிலையம்
55, வெங்கட்நாராயண சாலை
தி. நகர் சென்னை-600 017.

முதற்பதிப்பு : டிசம்பர் 86'

உரிமை : கனிமொழிப் பதிப்பகம்.

விலை : ரூ 5-50

22457
894.8115
இனைய

வெளியீடு : திருமகள் நிலையம்
சென்னை - 17.

அச்சிட்டோர் :
தமிழோசை அச்சகம்,
84, அபிபுல்லா சாலை,
தி. நகர், சென்னை-17.

புதிய தலை முறைக்கு ஒரு பூபாளம்

கொந்தளிக்கும் நெஞ்சங்களின் கொள்கை முரசமாக குமுறும் வயிறுகளின் போர் முழக்கமாக ஒலிக்கும் சிறப்பு கலைஞரின் சொற்பொழிவுக்குத்தான் உண்டு. அஞ்சுகத் தாய் ஈன்றெடுத்த அரிமாவின் முழக்கம் — இந்தியாவின் தென்கோடியில் ஒலித்தாலும் இமயம் வரை சென்று எதிரொலிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

குற்றுல அருவியெனத் துள்ளி வரும் தெள்ளுதமிழ் நடை, வற்றுத சிந்தனையின் வளம் பொதிந்த கருத்துக்கள், அங்கங்கே சுவை சேர்க்கும் அழகிய உவமைகள், உருவகங்கள், சொற்பொழிவின் நோக்கத் துக்கு அரண் சேர்க்கும் கிளைக் கதைகள்; இவையனைத்தும் சேர்ந்த கலைஞரின் சொற்

பொழிவு தமிழினத்தைத் தட்டியெழுப்பும் எழுச்சிப் பண்ணுக கிட்டத்தட்ட கடந்த அரைநூற்றாண்டாகத் தமிழகமெங்கும் ஒலித்து வருகின்றது.

சென்னை புதுக் கல்லூரியிலும், தாம்பரம் கிறிஸ்த்துவக் கல்லூரியிலும் சென்னை ரிசர்வ் வங்கி தமிழ் மன்றத்திலும் கலைஞர் ஆற்றிய உரைகள் இங்கே நூல்வடிவம் பெற்றுள்ளன. புதிய தலைமுறைக்கு ஒரு பூபாளமாக விளங்கும் இந்நூலை வெளியிடுவதில் நாங்கள் மகிழ்ச்சி யடைகிறோம்..

அ. இராமநாதன்.

திருமகள் நிலையம்.

பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

சமுதாய மறுமலர்ச்சி

''பொருளாதார பயிர் செழிக்க: அரசியல் என்கிற நெற்கதிர் அசைந்தாட. சமுதாய மறுமலர்ச்சி என்ற உரமும் நீரும் தேவை! மூடநம்பிக்கையை முதலாக வைத்து மக்களை ஏமாற்றும் செயல்களை முறியடிக்க இளைய சமுதாயம் எழுகவே!' என்று சென்னை புதுக்கல்லூரி விழாவில் 'சமுதாய மறுமலர்ச்சி' என்கிற தலைப்பில் மார்ச் - 21 1986ல் தலைவர் கலைஞர் நிகழ்த்திய உரை.

இந்தக் கல்லூரிக்குப் பெயர்தான் புதுக்கல்லூரியே தவிர, என்னைப் பொறுத்தவரையில் நான் பல முறை வந்து வந்து பேசிய கல்லூரியாகையால் எனக்கு இது பழைய கல்லூரிதான்!

இந்தப் பழைய கல்லூரியில், புதிய தலைமுறையை மறுமலர்ச்சி பெற்ற தலைமுறையாக வளர்க்க முடியுமா என்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்ற நான் உங்களை யெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை இந்த இனிய மாலை நேரத்திலே பெற்றிருக்கின்றேன்.

இங்கே வாழ்த்துக் கவிதை படித்த மாணவத்தம்பி 'உதிர்ந்த வாழ்த்துப் பூக்கள்' என்று ஒரு வரியினைக் குறிப்பிட்டார். பூக்கள் உதிர்ந்து மீண்டும் பூப்பதைத்தான் மறுமலர்ச்சி என்று சொல்கின்றோம். அதைப் போல இடையிலே வாழ்த்துப் பூக்கள் உதிர்ந்து போய் மீண்டும் வாழ்த்துப் பூக்கள் இப்போது மலர்ந்திருப்பதுங் கூட ஒரு மறுமலர்ச்சிதான்!

எனவே வாழ்த்துப் பூக்கள் உதிர்ந்த பிறகும் மீண்டும் பூத்துக் குலுங்குகின்ற புதிய உணர்வோடு என்னை வரவேற்றுள்ள மாணவத் தம்பிகள் அனைவருக்கும் பேராசிரியப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அந்தக் கவிதையிலே மற்றொரு வரி குறிப்பிட்டார். "நாங்களெல்லாம் மூங்கில்; முரட்டு வாதத்திற்கு வருவோரை முரட்டுத்தனமாகத் தாக்குவோம்; ஆனால், உன் கையிலே நாங்கள் புல்லாங்குழலாக மாறுவோம்" என்று என்னைப்பார்த்துச் சொன்னார். ஒரு மூங்கில் புல்லாங்குழலாக மாறிய பிறகு யாரையுந் தாக்குவதற்கு அது பயன்படாது. அது புல்லாங்குழலாக மாறி என் கையிலே கிடைத்தபிறகு நல்ல நாதம் அதன் மூலமாக எழுகிறதா என்றுதான் பார்ப்பேன். யாரையும் தாக்குவதற்குப் பயன்படுத்த மாட்டேன்.

ஒரு வேளை புல்லாங்குழல் நாதம் எழுப்புவதற்கு மாத்திரம்தானு என்ற கேள்வி எழுமேயானால் — சில நேரங்களில் நீறு பூத்த நெருப்பை மேலுங் கனலாக ஆக்குவதற்குப் புல்லாங்குழலை ஊது குழலாக ஆக்கி அந்தக் கனலைப் பெருக்க பயன்படுத்துவேன்; 'புல்லாங்குழல் அடுப்பு ஊதுகிறது' என்ற அந்த நிலையிலே அல்ல. புல்லாங்குழல் கனலைப் பெருக்குகிறது என்ற அந்தக் குறிக்கோளோடு மாணவத் தம்பிமார்களைப் பயன் படுத்திக் கொள்வேன்; அப்படி பயன் படுத்திக் கொள்ள அழைக்கும் போது நீங்களெல்லாம் எனக்காக அல்ல; எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படுவதற்காகத் தயாராக இருக்க வேண்டும் என்ற அன்பு அழைப்பை இந்த நேரத்தில் உங்களுக்கு விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'சமுதாய மறுமலர்ச்சி' என்ற தலைப்பில் இன்றைய நிகழ்ச்சியிலே நான் பேசுகிறேன் எனறுலுங்கூட, இது இந்தக் கல்லூரியின் திட்டப்பேரவையின் சார்பில் நடைபெறுகின்ற ஆண்டு விழா என்பதை நானும் நீங்களும் மிக நன்றாக அறிவோம்.

'திட்டப் பேரவை' என்ற அந்தச்சொற்றொடரை எண்ணும்பொழுதே—நான் இப்பொழுது திட்டப்படும் பேரவையிலே இல்லாவிட்டாலும் திட்டப் பேரவையிலே

அமர்ந்து நீங்கள் வகுத்தளித்த திட்டங்களைப் பற்றியும், அத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மேற் கொண்ட முயற்சிகளைப் பற்றியும் அதற்கென, நடத்திய பயணங்களைப் பற்றியும், இன்னும் நீங்கள் உங்களுடைய சிந்தனையிலே தேக்கியிருக்கின்ற திட்டங்களைப் பற்றியும் இங்கே படித்தளிக்கப்பட்ட அறிக்கை மூலமாக தெரிந்து கொண்டேன்.

ஒரு சாதாரணக் குடும்பமானுல் கூடத் திட்டமிட்ட வாழ்வுதான் அந்தக் குடும்பத்தைச் சிறப்பான இடத்திலே அமர்த்த முடியும். வீட்டுக்கு எப்படித் திட்டமிட்ட வாழ்வு தேவையோ அதைப் போலவே நாட்டிற்கும் திட்டமிட்ட சாதனைகள் தேவை. திட்டமில்லாமல் நாளைக்கு நடைபெறுகின்ற தேர்தலிலே எப்படியும் வெற்றி பெற்றுக வேண்டும் என்பதற்காக நாட்டைத் தரும சத்திரமாக ஆக்கிக் கொண்டே இருந்தால் திட்டங்களே இல்லாமல் மேலும் மேலும் தரித்திரர்களாக ஆகி வாக்களிப்பதற்கு என்ன தருகிறுய் என்று கேட்கின்ற வகையில் வாக்குச்சீட்டின் விலை நாளுக்கு நாள் உயர்த்தப்படுமேயல்லாமல் ஜனநாயக மாண்பு சீர் குலைந்து முறையான திட்டங்கள் இல்லாமல் ஒருதேசம் பாழாகிவிடும்!

எனவே தான் உண்பதற்குச் சோறும் உடுப்பதற்கு உடையுங்கூட இலவசமாகக் கிடைத்தாலும் அப்படிக் கிடைப்பதை நான் மறுப்பவன் அல்ல என்றுலுங்கூட, அப்படிக் கிடைப்பது திட்டங்களின் பயனுக, நாமே உழைத்து — பணியாற்றி — உருவாக்கிய திட்டங்களின் மூலம் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய அளவுக்கு நாட்டிலே உள்ள ஒவ்வொரு மனிதனும் முன்னேற வேண்டும். அப்படிப்பட்ட முன்னேற்றத்தை அளிக்கக் கூடிய திட்டங்கள் ஒரு நாட்டுக்குத் தேவை.

அந்தத் தேவையை நிறைவு செய்கின்ற வகையில் புதுக்கல்லூரி மாணவர்கள் இந்தத் திட்டப் பேரவையின்

சார்பாகத் தங்களுடைய பணிகளை ஆற்றிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல், பொருளாதாரம், சமுதாயம் என்ற சொற்கள் பயன்படுத்தப்படும் பொழுது அரசியலில் மட்டும் கவனம் செலுத்துவோர்; அரசியல் வாயிலாக மாத்திரமே ஒரு நாட்டினுடைய எதிர்காலத்தினை நிர்ணயிக்க முடியும் என்று கூறக்கூடும்.

பொருளாதார வல்லுநர்கள் பொருளாதாரத்திலே மாற்றம் ஏற்படுமேயானால் நாட்டிலே நாம் எதிர் பார்க்கின்ற ஏற்றத்தாழ்வற்ற மாற்றம் ஏற்படக்கூடும் என்று கருதக்கூடும்.

அரசியல் சரியற்றதென்றோ, அல்லது பொருளா தாரம் தேவையற்றதென்றோ நான் கூறவிரும்பவில்லை, ஆனால் அரசியலானாலும் பொருளாதாரமானாலும் இவை இரண்டும் நிலை பெற—ஒளிவிட, மக்கள் நல்வாழ்வு பெற பொருளாதாரத்தின் அடிப்படையிலே கூறுகின்ற வாழ்வு செம்மையான வாழ்வாக அமைய, அரசியல் ரீதியாகக் கிடைக்கின்ற விடுதலை—சுதந்திரம் அல்லது ஆட்சி இவைகள் எல்லாங்கூட ஒழுங்குற நடை பெற, அரசியல் ரீதியாக ஏற்பட்ட வாழ்வானாலும் பொருளாதார மாற்றதின் காரணமாக ஏற்படுகின்ற வாழ்வானாலும் இந்த இரண்டும் நின்று நிலைக்கவேண்டு மேயானால் சமுதாய மறுமலர்ச்சி நிச்சயம் இருந்தே தீரவேண்டும்.

ஒரு கழனியில் நெற்பயிரை எடுத்துக் கொண்டால் அந்த நெற்பயிரினுடைய உச்சியிலே சதிராடிக் கொண்டி ருக்கின்ற மரகத வண்ண நெல்மணிகள் அரசியலுக்கு உவமை என்று ஆகுமேனுயால் அதனுடைய பயிர்த்தண்டு பொருளாதாரம். அந்த நெல்மணிகளும் இந்தப் பயிர்த் தண்டும் கிடைக்க வேண்டுமேயானால்—அடியிலே இருக் கின்ற உரந்தான்—சமுதாய விழிப்புணர்ச்சி—சமுதாய மறுமலர்ச்சி!

அந்தச் சமுதாய மறுமலர்ச்சி என்கின்ற—உரத்திலே விளைவதற்கும் ஒரு நெல்மணி வேண்டுமல்லவா என்ற கேள்வி எழுக்கூடும். ஆம்! அந்த நெல்மணிக்குள்ளேதான், அந்தப் பயிர்த்தண்டும் இருக்கின்றது; குலுங்கக்கூடிய கதிரும் இருக்கிறது. இருந்தாலும் அந்த ஒரு சிறு நெல்மணியை இயக்குகின்ற ஆற்றல் வேரடியிலே—கழனியிலே இருக்கின்ற உரத்திற்கும் நீருக்குந்தான் உண்டு.

எனவே சமுதாயம் செப்பனிடப்படாமல் என்னதான் பொருளாதார மாற்றம் ஏற்பட்டாலும் அரசியலிலே பெறுகின்ற வெற்றிகள் கிடைத்தாலும் அது நிலைத்து நிற்க முடியாது என்பதுதான் என்னை ஆளாக்கியவர்கள் வளர்த்தவர்கள்—நான் தலைவராக ஏற்றுக் கொண்டவர்கள் எனக்கும் நாட்டிற்கும் போதித்துள்ள தலைசிறந்த பாடமாகும்.

சமுதாயத்திலே மறுமலர்ச்சி தேவை என்று சொல்லும் பொழுது இங்கே பேசிய மாணவர் அணிச் செயலாளர் தம்பி துரைமுருகன் குறிப்பட்டதைப்போல் பழைய வழக்கங்களில்—மூட நம்பிக்கைகளில் நாம் ஒரு காலத்திலே நம்மையும் ஒப்படைத்துக் கொண்டிருந்தோம். அவைகளுக்கு மாறுக நடப்பது ஆண்டவனுக்கு விரோதமான செயல்; நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற சம்பிரதாயங்களுக்கு மாறுன காரியம் என்றெல்லாங்கூட கருதிக் கொண்டிருந்தோம்.

ஆனல் இன்றைக்கு நவீன உலகத்தில் நாமும் சேர்ந்து தேவையான பல விஞ்ஞான முன்னேற்றங்களை ஏற்றுக்கொண்டு அந்த விஞ்ஞான சாதனைகள் மூலமாகப் புதியதோர் உலகத்தைப் படைக்க வேண்டும் என்கின்ற அந்த ஆர்வத்தைப் பெற்றிருக்கின்றோம்.

ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வானத்திலே நிலவு கவிஞர்களுக்கு மாத்திரம் கவிதைக்குப்

பயன்பட்ட ஒன்றாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த நிலவுக்கே பயணம் செய்து அங்கு காலூன்றி அங்கே இருக்கின்ற கல்லையெடுத்து வந்து உலகெங்கும் காட்டுகின்ற அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்றது. இது உலகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மிகப்பெரும் மாறுதல்—முன்னேற்றம்!

அந்த முன்னேற்றத்தை நம்முடைய சமுதாயமும் பின் தொடர வேண்டும் என்கிற ஆசையிலேதான் தந்தை பெரியார் அவர்களால் ஒரு பேரியக்கம் தமிழகத்திலே உருவாக்கப்பட்டது—பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்டது.

நிலவை அருகில் வரும்படி அழைத்து; அழுகின்ற குழந்தைக்குத் தாய்மார்கள் கண்ணுடியில் நிலவைக் காட்டிய காலம் ஒன்றிருந்தது. ஆனால் இன்னும் நூறு ஆண்டுக்குள் நிலவைப் பிடித்துத் தா என்று அழும் குழந்தையை அழைத்துக் கொண்டு நிலவுக்கே சென்று இதுதான் நிலவு என்று காட்டுகின்ற அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்தாலும் வியப்படைவதற்கில்லை.

இப்படி உலகத்திலே என்னதான் விஞ்ஞானம் வளர்ந்தாலுங்கூட நாம் இன்னமும் சந்திரனையும் பூமியையும் ராகு கேது என்ற பாம்புகள் விழுங்குவதால் தான் கிரகணம் ஏற்படுகிறது என்கின்ற கதையை நம்பிக் கொண்டுதான் இருக்கிறோம்.

அந்த நம்பிக்கையிலிருந்து விடுபட்டு ஒரு மறுமலர்ச்சி யுகத்திற்கு நாம் செல்ல வேண்டும் என்பதுதான் இந்த விழாவிலே நான் இளைய தலைமுறைக்கு விடுக்கின்ற அழைப்பாகும்.

எதையும் அப்படியே நம்பவேண்டும் என்று கூறுவது பகுத்தறிவு வாதமல்ல. பகுத்தறிவு வாதத்தை எடுத்து வைத்த தந்தை பெரியார் அவர்கள்;

"அவர் சொன்னுர் இவர் சொன்னுர் என்று
அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்
எவர் சொன்ன சொல்லானுலும் அதனையுன்றன்
இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்!"

—என்ற கவிதை வரிகளே வெளியிட்டுத்தான் அவருடைய 'குடியரசு', 'பகுத்தறிவு' போன்ற சுயமரியாதை இயக்க ஏடுகளை நாட்டில் நடமாட விட்டார்.

சாமி சிதம்பரனுர் என்ற ஆழ்ந்த பகுத்தறிவாளர் தீட்டிய அந்தப் பாடல், சமுதாயத்திற்கு மறுமலர்ச்சி தேவையென்று தொடங்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்கப் பட்டது.

நான் பழைய காலத்து மனிதர்களேயெல்லாம் முட்டாள்கள் என்றே அல்லது அவர்கள் அறிவற்றவர்கள் என்றே அல்லது அவர்கள் மௌடீகத்திலே வீழ்ந்து கிடந்தவர்கள் என்றே கண்டிக்க அல்லது விமர்சிக்க விரும்பவில்லை.

ஏனென்றுல் காலத்திற்கேற்பச் சில மாறுதல்கள் உலகத்திலே விளைகின்றன, கணவன் இறந்தால் உடன் கட்டை ஏறுகின்ற வழக்கம் சங்ககாலத்திலேயே இருந்தது. சங்ககாலத்தில் பூதப்பாண்டியன் தேவி பாடிய பாடலைப் படித்துப் பார்த்தால் என் கணவர் இறந்த பிறகும் என்னை ஏன் வாழச் சொல்கிறீர்கள்? ஒரு விதவை கடைப்பிடிக்க வேண்டிய கொடுமைகளேயெல்லாம் நான் கடைப்பிடிப்பதைவிட மாள்வதே மேல் என்று வாதிடுகின் றுள். அத்தகைய காட்சிகளை சங்க இலக்கியங்களிலே நாம் காண முடியும்.

எனவே தமிழன் இலக்கியம் படைத்திருந்த காலத்திலே கூட இப்படிப்பட்ட வழக்கங்கள் இருந்தன. சங்க காலத்திலேயே தமிழக பண்பாட்டுக்கு புறம்பான பல கொள்கைகள் பலகருத்துக்கள் தமிழகத்தில் நுளைந்து

விட்டன. அது யாரால் எப்படி நுழைந்தது என்கின்ற ஆராய்ச்சியிலெல்லாம் நான் இங்கே ஈடுபட விரும்பவில்லை; உங்களுக்குத் தெரியாததல்ல என்பதால்!

பரிபாடல் போன்ற நூல்களை எடுத்துப் படித்துப் பார்த்தால் அப்பொழுதே புராணக் கதைகள் சங்க இலக்கியங்களிலே இடம் பெற்றிருப்பதைக் காண முடியும்.

எனவே ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூட சில பழக்க வழக்கங்கள் நம்மைத் தொத்திக் கொண்டு விட்டன. அந்தப் பழக்கவழக்கங்களிலிருந்து நாம் மெல்ல மெல்ல மாறுபட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் நாட்டில் நடைபெற்றன. அதற்குரிய மார்க்கங்கள் தோன்றின; சமயங்கள் உருவாயின; வழி காட்டிகள் ஏற்பட்டார்கள்.

ஒருநாடு, ஓர் அரசு, ஒருசமுதாயம், ஒரு குடும்பம் இவையெல்லாம் எப்படியிருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற வழி காட்டியாகத் திருக்குறள் நமக்கு வாய்த்தது!

இவை அத்தனைக்கும் பிறகுங்கூட இந்தச் சமுதாயம் ஒரு முழுமையான மாற்றத்தைப் பெறவில்லை என்றால் என்ன காரணம்?

சில காரியங்களை மதத்தின் பெயரால்—கடவுளின் பெயரால்—சாத்திர சம்பிரதாயங்களின் பெயரால் சொன்னால்தான் மக்கள் அதற்குக் கட்டுப்படுவார்கள் என்ற ஒரு முறையை நாம் அந்தக் காலத்தில் கையாண்டோம்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால்—அம்மைநோய், காலரா நோய் இந்த நோய்கள் இப்பொழுது ஓர் ஊரை அல்லது குப்பங்களைத் தாக்கினால்—ஏழை எளிய மக்களை — தூய்மையற்ற பகுதிகளிலே வாழ்கின்ற மக்களைத் தாக்கினால் — தாக்குவதற்கு முன்பே தடுப்பு முறைகள் இன்றைக்கு வளர்ந்துள்ளன.

ஒருவேளை தடுப்புகளையும் தாண்டித் தாக்கிவிட்டால் அவர்களில் சிலர் போகப் பலரைக் காப்பாற்றக்கூடிய முறைகள் — மருத்துவத் துறை வளர்ச்சி—அதற்கென அரசு எடுக்கின்ற முயற்சி இவைகளெல்லாம் இன்றைக்கு உண்டு.

ஆனால் பழங்காலத்தில் ஒரு கிராமத்திலே அம்மை அல்லது காலரா—வாந்திபேதி என்ற தொத்து வியாதிகள் ஏற்பட்டு விடுமேயானால், இந்தத் தொத்து வியாதி இந்தக் கிராமத்தை விட்டு அடுத்த கிராமத்துக்குப் பரவக் கூடாது என்பதற்காக அந்தக் கிராமத்திலே உள்ள பெரியவர்களெல்லாம் ஒன்று கூடி அந்த ஊரிலே இருக்கின்ற அவர்களால் உருவாக்கப்பட்ட மாரியம்மனுக்கு அல்லது காளியம்மனுக்குக் காப்புக்கட்டி, அந்தக் காப்பு மறுபடியும் கழற்றப்படுகிற வரையில் இந்த ஊரார் வெளியூருக்குச் செல்லக் கூடாது; வெளியூரார் இந்த ஊருக்கு வரக்கூடாது என்று மாரியையுங் காளியையுங் காட்டி பயமுறுத்தி மக்கள் இந்த ஊரிலிருந்து வேறு ஊருக்குச் செல்லாமலும் வேறு ஊரிலிருந்து இந்த ஊருக்கு வராமலும் தொடர்பு அற்றுப் போன காரணத்தால் அம்மையோ காலராவோ பரவாமல் அன்றைக்கு அம்மன் பெயரால் தடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இது கிராமப் புறங்களிலே ஒரு நூறுண்டுகளுக்கு முன்பு நம்முடைய பெரியவர்கள் — முன்னோர்கள் கடைப்பிடித்த ஒரு முறை; அது என்ன ஆயிற்று என்றால் அதற்குப் பிறகு இந்தக் காப்புக் கட்டுகின்ற முறை; அம்மையோ காலராவோ பரவுகின்ற நேரத்தில் கடைப் பிடிக்கப்பட்டது; மாரியம்மனுக்கோ காளியம்மனுக்கோ காப்புக் கட்டிவிட்டுக் 'காப்புக் கட்டித் திருவிழா'வும் நடத்தி அந்தத் திருவிழாவை விமரிசையாகக் கொண்டாட ஒரு தெருக் கூத்தையும் நடத்தி, தேரும் ஓட்டி எல்லா ஊர் மக்களும் அங்கே வந்து ஆளுக்குக் கொஞ்சம்

அம்மையையும் வாந்தி பேதியையும் ஒவ்வொரு ஊருக்கும் வாங்கிப் போகிற நிலைமை ஏற்பட்டது.

எனவே அந்தக் காலத்திலே பெரியவர்கள் நல்ல எண்ணத்திலே செய்த சில காரியங்கள் பின்னுல் வந்த வர்களால் புரிந்து கொள்ளப்படாமல் அவைகள் தீயனவாக முடிந்ததற்கு இவைகளெல்லாம் அனுபவ ரீதியாக நாம் கண்ட தெளிவான சான்றுகளாகும்— உண்மைகளாகும்.

இன்றைக்குப் பத்திரிகையிலே செய்தி வருகிறது. நாற்பத்து ஐந்து அல்லது ஐம்பது வயதுள்ள ஒருவர் சாலையிலே சென்று கொண்டிருந்தார். திடீரென்று நெஞ்சு வலித்தது, மாரடைப்பு ஏற்பட்டது மரண மடைந்து விட்டார் என்று; மாடியில் அமர்ந்திருந்தார். காலையிலே பார்த்தால் இறந்து கிடந்தார்; மாரடைப்பு என்று செய்தி வருகிறது. கிராமங்களில் ஒரு முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இதே நிகழ்ச்சி நடைபெற்றுல்? நான் ஒரு கிராமப்புறத்திலே பிறந்தவன் என்ற காரணத்தினுல் எனக்கு நன்ருக நினைவிருக் கிறது. என்னுடைய கிராமத்திற்குப் பக்கத்து ஊரில் நாலு ஐந்து கல்தொலைவில் நடைபெற்ற பல சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. இன்னர் இரவு பன்னிரண்டு மணிக்குத் திருக்குவளையிலிருந்து திருவாய்மூருக்கு நடந்து சென்ருர். பாலத்திற்கு அருகில் அங்கிருந்த காட்டேரியோ, இருளனே அடித்து வாயிலும் மூக்கிலும் இரத்தங் கக்கி அதே இடத்தில் அவர் செத்துவிட்டார் என்று பேசிக் கொள்வார்கள். மறுநாள்முதல் யாரும் அந்தப் பாலத்தின் பக்கமே போக மாட்டார்கள்.

வாயிலும் மூக்கிலும் இரத்தங் கசிந்து இறந்து போவது மாரடைப்பின் காரணமாக—இரத்தநாளத்தில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக என்று இன்றைக்கு நாம் தெரிந்து கொண்டிருக்கிறேம்; தெளிவு பெற்றிருக் கிறேம். ஆனுல் அன்றைக்குப் பேய், பூதம், பிசாசு

இவைகளின் காரணமாக-அவைகள் அறைந்து விடுவதால் மக்கள் இறந்து விட்டார்கள் என்று நாம் நம்பினோம்; அந்த நம்பிக்கையிலே வாழ்ந்தோம். அதை மாற்று வதற்குத் தன்மான இயக்கம், அதன் தலைவர் தந்தை பெரியார், அறிஞர் அண்ணு இவர்களெல்லாம் பெரும் பாடுபட வேண்டியிருந்தது. இன்றைக்கும் அந்த முயற்சியிலே முழுவெற்றி பெற்று விட்டோமா என்றால் இல்லை. வெற்றி பெற்றுவிட்டோம் என்று களிப்போடு கூற நான் உங்கள் முன்னுல் நிற்கவில்லை.

பேய், பூதம், பிசாசு இவைகளைப் பற்றி இன் றைக்குங்கூட சில படித்த மக்களிடத்திலே 'பசினுல் 'என்னதான் நீங்கள் சொன்னுலும் எங்கள் ஊரிலேயே, எங்கள் சொந்தக்காரர் ஒருவருக்கே பேய் பிடித்திருக் கிறது. நானே நேரில் பார்த்தேன்' என்று என்னிடத்திலே வாதிடக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே சிலபேர் நம்முடைய இயக்கத்தின் ஆதரவாளர்களாகக் கூட இருக்கக்கூடும். ஆகவேதான் சமுதாய மறுமலர்ச்சியில் இன்னும் முழு வெற்றியை நாம் அடையவில்லை என்று குறிப்பிடுகிறேன்.

பேய், பூதம், பிசாசு என்பவைகள் இல்லையானுல் தமிழ்மொழி மாத்திரம் தெரிந்திருக்கிற எங்கள் ஊர்க் காரர் இந்த பேய்வந்து ஆடும்பொழுது வேறு மொழியும் பேசுகிறுரே, எப்படி? அல்லது வேறு மொழிப் பாடல்களையும் பாடுகிறுர்களே எப்படி? என்றெல்லாம் என்னிடத்திலே வாதிட்டவர்கள் உண்டு. இதுபற்றி அன்றைக்கே இந்த இயக்கத்தினுடைய கொள்கை விளக்கச்சுடர்களாக விளங்கிய கைவல்யம், மா. சிங்கார வேலர் போன்றவர்கள் அருமையான ஆராய்ச்சிக் கட்டுரைகளையெல்லாம் எழுதியிருக்கிறுர்கள்.

பேய் பிடித்தவர்கள், பிசாசு பிடித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தங்களுக்கு ஒரே மொழி தெரிந்திருந்துங்கூட வேறு மொழி வார்த்தைகளை உச்சரிக்

கிறார்கள் என்றால் ஏன் என்று கேட்டுவிட்டு விளக்கமும் அளிக்கிறார்கள். அவர்கள் தந்த விளக்கம்-கிராமபோன் இசைத்தட்டில் ஒருவருடைய குரலைப் பதிய வைக்க அவரைப் பாடச் சொல்லி ஓர் ஊசியின் மூலம் இசைத் தட்டிலே அவருடைய குரல் பதிந்து வைக்கப்படுகின்றது. அந்த ஊசி இசைத்தட்டிலே குத்திக் கிழித்து வரும்போது அந்த இசைத்தட்டு மென்மையாக—அந்த ஊசி பதிகின்ற அளவிற்கு இளகிக் கொடுக்கின்ற வகையில் அந்தத் தட்டு இருக்கின்றது. ஊசி பதிந்துமுடிந்த பிறகு இளகியிருந்த அந்தத் இசைத்தட்டு இறுகிவிடுகிறது. அப்படி இறுகிய பிறகு மீண்டும் அந்த இசையைக் கேட்கவேண்டுமேயானால் அதேபோல ஓர் ஊசியை வைத்துச் சுற்றவிட்டால் அதிலே பதிந்து இருக்கின்ற கீறல்கள் மூலமாக அந்த இசையோ—குரலோ—ஒலியோ வெளிப்படுகிறது. அதைப்போல மனிதனுடைய மூளையில் எத்தனையோ இலட்சக்கணக்கான சுருக்கங்கள் இருக்கின்றன. அந்தச் சுருக்கங்கள் நம்முடைய காதிலே கேட்கின்ற ஒலிகளையெல்லாம் அந்த மூளைச் சுருக்கங்களிலே பதிய வைக்கின்றன. அப்படிப் பதிய வைக்கப் படுபவைகள் கிராமபோன் இசைத்தட்டிலே ஊசி பட்டு ஒலி வெளிப்படுவதைப்போல மூளையிலே கோளாறு ஏற்பட்டு பேய் பூதம் பிசாசு என்கின்ற மன மருட்சிக்கு ஆட்பட்டு உளருகின்ற நேரத்தில் என்றைக்கோ காதிலே கேட்ட வேறு பாஷைகளெல்லாங்கூட வெளிப்பட்டுவிடும் என்று சிங்காரவேலர் போன்ற சீர்திருத்தச் செம்மல்கள் அன்றைக்கே விளக்கமளித்திருக்கிறார்கள்.

பேய், பூதம், பிசாசுகள் பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அளவிற்கு இன்றைக்கு இருக்கிறதா? இல்லை.

அதுமாத்திரமல்ல; இந்தப் பேயோ, பூதமோ பிசாசோ பெண்களைப் பிடிக்கின்ற அளவிற்கு ஆண்களைப் பிடித்து ஆட்டுகிறதா? அதுவும் இல்லை. என்ன காரணம்?

பெண்கள் கொஞ்சம் பயந்த சுபாவம் கொண்டவர்கள். நான் அதற்காக அவர்கள் வீராங்கனைகள் அல்ல என்று சொல்லமாட்டேன். புறநானூற்றைப் படித்துப் பார்த்தால் பழைய காலத் தாய்மார்கள் வீரம் செறிந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைய சமுதாயத்துப் பெண்கள் அப்படி ஆகி விட்டார்கள். புலியை முறத்தால் அடித்தாள் மறத்தி என்று புறநானூறு சொல்கிறது. இன்றைக்கு அதே மறத்தி, பூனை குறுக்கே போனால் மீண்டும் வீட்டுக்குள்ளே திரும்பி விடுகிறாள்; அப்படிப்பட்ட மூட நம்பிக்கைக்கு ஆளாகி விட்ட காரணத்தால்!

எனவே பெண்கள் பலவீனமானவர்கள் என்று இழித்துப் பழித்துப் பேசுவதற்காக நான் இதைக் குறிப்பிடவில்லை. அவர்களுடைய மனம் பலவீனமாகப் பழக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் அந்த உணர்வுகளுக்கு; நம்பிக்கைகளுக்கு விரைவிலே ஆட்படுகின்றார்கள்.

ஒன்றைச் சொல்லுகிறேன்—இவ்வளவு முன்னேறிய இந்தக் காலத்தில்-விமானங்கள் ஆகாயத்தில் சிட்டுக்குருவிகளைப்போலப் பறக்கின்ற இந்தக் காலத்தில்-நினைத்தால் நாளைகே அமெரிக்கா செல்லலாம்; ரஷ்யா செல்லலாம்; திரும்பி மறு நாளே வரலாம் என்று உலகத்தினுடைய தொலைவு சுருக்கப்பட்டுவிட்ட இந்தக் காலத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் நான் கண்ட காட்சி!

உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்காக ஒரு நெடிய சுற்றுப் பயணத்தை நான் மேற்கொண்டேன். மதுரையிலேயிருந்து ஒரு நாள் மாலை ஐந்து மணிக்கு நானும் நண்பர்களும் புறப்பட்டுச் சிவகங்கையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். செல்லுகிற வழியில் சிற்றுண்டி அருந்தலாமா என்று யோசித்து ஒரு மரத்தடியில் காரை நிறுத்தி விட்டு அங்கே சிற்றுண்டி அருந்தத் தொடங்கினோம்.

எங்கோ ஓர் உடுக்குச் சப்தம் கேட்டது. ஒரு பயங்கரமான கூச்சலுங் கேட்டது. அந்தி வேளை. உற்றுக் கவனித்தோம். உடுக்குச் சப்தமும் கூச்சலும் நெருங்கிக் கொண்டே வந்தன. சற்று அச்சம் ஏற்பட்டது எங்களுக்கு!

நெல்லையிலே இருந்து எங்களுக்குப் பாதுகாப்புக்காக தம்பி கோபால்சாமி தயாரித்திருந்த தொண்டர் படை இரண்டு காகளில் வந்திருந்தது. சப்தம் அருகே வர வர அவர்கள் எங்களைச் சுற்றி நின்று கொண்டார்கள். நண்டர்கள் தென்னரசு, பொன். முத்து ராமலிங்கம் இவர்களெல்லாம் என்கூட இருந்தார்கள்.

மிக அருகிலே சப்தம் வந்ததும் நாங்கள் உற்றுப் பார்த்தோம். ஐந்தாறு பேர்! கையிலே ஓர் ஆட்டுக் குட்டி! ஒருவர் உடுக்கு அடித்துக்கொண்டு வருகிறார். இருபது வயதுள்ள ஓர் இளம்பெண் தலைவிரி கோலமாக ஆடிக்கொண்டு வருகிறாள். அவள் பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவளாக இருக்கவேண்டும்.

நான்கு ஐந்து பேர் நல்ல மீசை வைத்த முரடர்களாக —ஆஜானுபாகுகளாக—கையிலே அரிவாளோடு அந்தப் பெண்ணைச் சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு பெண்கள்—வயதான தாய்மார் களும் உடன் வருகிறார்கள்.

அப்படியே சாலை வழியாக நேராகப் போவார்கள் என்று பார்த்தால் என் காருக்கு நேராகவே வந்தார்கள். பக்கத்திலே உள்ள ஒரு மரத்தடியிலே போய் நின்றார்கள். நான் யாரென்று தெரிந்து கொள்ளக்கூடாது என்பதற் காகக் காருக்குள்ளே மறைவாக அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன்.

வந்தவர்கள் மரத்தடிக்குச் சென்று குய்யோ முறையோ என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்த பெண்ணை அந்த மரத்திற்கு அருகிலே கொண்டு போய்

அவளது தலை முடியை நன்றாக முடிந்து அதனை அந்த மரத்திலே வைத்து ஆணி அடித்தார்கள்.

அப்படி ஆணியிலே அடிக்கப்பட்டது போக அவளது மீதி முடியை ஒருவர் கத்தியைக் கொண்டு இடையிலே வெட்டத் தொடங்கினர். அப்படி அவளது கூந்தலை வெட்டுவதற்கும் கீழே இருக்கின்ற ஆட்டுக்குட்டியைப் பலியிடுவதற்கும் நேரம் சரியாக இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய கணிப்பு போலும்! அப்படியே வெட்டினர்கள்.

அவ்வளவு நேரம் பேய் ஆடிக்கொண்டிருந்த அந்தப் பெண் அடுத்த நொடியே திடீரென்று நிம்மதியாகிப் பூக்கொடுங்கள் என்று கேட்டு; கொடுத்த மலர்களைத் தலையிலே அணிந்து கொண்டு முகங் கழுவிப் பொட்டிட்டு அவர்களோடு அமைதியாகத் திரும்பிச் சென்ற காட்சியையும் பார்த்தோம்.

அந்தப் பெண்ணைப் பார்க்கும்போது வேண்டுமென்றே இப்படியொரு ஆட்டம் போட வேண்டும் என்று எண்ணிய பெண்ணாக எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் ஏதோ ஓர் உணர்வின் காரணமாக இப்படிப்பட்ட பேயாட்டம் ஆடவும், ஆனால் இது போன்ற மரத்திலே தன்னுடைய கூந்தலை வைத்து ஆணியடித்தால் அப்படியடிக்கப்பட்டவுடன் அந்தப் பேய் போய்விடும் என்கின்ற நம்பிக்கை அந்தப் பெண்ணுக்கும் மற்றவர்களுக்கும் இருந்த காரணத்தாலும் பேய் விலகிவிட்டதென்று அந்தப் பெண்ணும் கருதினாள்; மற்றவர்களும் கருதினர்கள். பலியிடப்பட்ட ஆட்டைத் தூக்கிக் கொண்டு போனர்கள். அன்றைக்கு நல்ல விருந்தாக இருந்திருக்கும். இது நிலைமை; இன்றைக்குக் கூட நாட்டில் நடைபெறுகிறது.

நான் திருவாரூர் உயர் நிலைப்பள்ளியிலே படித்துக் கொண்டிருந்த போது எங்கள் பள்ளியின் தலைமை யாசிரியர் மரியதாஸ் என்பவர் ஆழமாக முற்போக்கு

இயக்கக் கருத்துகளைக் கொண்டவர். நல்ல ஆங்கில ஆற்றலாளர். அவர் இப்படிப்பட்ட நம்பிக்கை குறித்துப் பேசும் போது ஓர் உண்மைச் சம்பவத்தைக் குறிப் பிட்டார்.

அவர் திருவாரூர் உயர் நிலைப் பள்ளிக்கு வருவதற்கு முன்பே அருகில் உள்ள நாகப்பட்டினத்திலே பணி யாற்றினர். அப்பொழுது இருவருக்கும் ஒருவாக்குவாதம் நடைபெற்றது. ஒருவர் பேய், பூதம், பிசாசே இல்லை என்று வாதிடுகின்ற சுயமரியாதைக்காரர். இன்னொருவர் அவை உண்டு என்று வாதிடுகின்ற வைதீகர். இருவருக்கும் நடைபெற்ற வாக்கு வாதத்தில் நூறு ரூபாய் பந்தயங் கட்டினர்கள்.

"இன்று இரவு-நள்ளிரவில் இடுகாட்டிற்குத் தனி யொருவனுகச் சென்று அங்கு யாருமில்லாத நேரத்தில் ஓர் ஆணியை அங்குள்ள சுவரில் அடித்து விட்டு வர வேண்டும்" என்று பந்தயங் கட்டப்பட்டது.

சுயமரியாதைக்காரரான நண்பர் 'நிச்சயமாகச் செய்கிறேன்; பந்தயத்தில் வெற்றி பெறுவேன்' என்று சொன்னர். அவ்வாறே அவர் துணிவாகச் சென்றார். சென்று ஆணியை அடித்தார். ஆனல் திரும்பி வரவில்லை. காலையிலே போய்ப் பார்த்தால் அவர் அங்கே இறந்து கிடந்தார்.

"ஏன்?" என்று கேள்வியை எழுப்பிவிட்டுத் தலைமை யாசிரியர் விளக்கஞ் சொன்னர். வேருென்றும் நடக்க வில்லை அவர் எண்ணியவாறு துணிவோடு சென்று ஆணியை அடித்தார். அதுவரையில் அவருக்குப் பேய் பூதம், பிசாசுகளிலே, நம்பிக்கை கிடையாது. ஆணி அடித்தபோது காற்றில் அவருடைய துண்டு ஆடி அந்த ஆணியிலே சிக்கிக் கொண்ட காரணத்தால் திரும்பிய பொழுது ஆணியிலே சிக்கியிருந்த துண்டு அவரை இழுத்தது. இழுத்தவுடன் 'ஐயோ! பேய் தான் இழுக்கிறது

"என்று பயந்தார்". பயந்தவுடன் இறந்து விட்டார் அந்தப் பயந்தான் அவரைக் கொன்று விட்டதே தவிரப் பேயுமில்லை; பிசாசுமில்லை யென்று அந்தச் சம்பவத்தை இளம் மாணவர்களாக இருந்த எங்களுக்கு விளக்கி அப்படிப்பட்ட நம்பிக்கையிலிருந்தெல்லாம் விடுபட வேண்டும் என்கின்ற அறிவுரையை அந்தக் காலத்திலே பள்ளிபிலே அவ்வாசிரியர் எங்களுக்கு வழங்கினர். அதையெல்லாம் நான் ஏன் இங்கே நினைவூட்டுகின்றேன் என்றால் அத்தகைய நம்பிக்கை இன்றைக்கும் சென்னை போன்ற மாநகரங்களிலேகூட சிற்சில பகுதிகளில் இருக்கிறது. எனவேதான் சமுதாயத்திலே நல்லதொரு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு மாணவச் செல்வங்களாகிய நீங்களெல்லாம் பாடுபட வேண்டும் என்று தான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எதற்கும் ஒரு காரணத்தைச் சொல்லுகின்ற தொன்மைக் கதைகள்—புராணங்கள் நம்மிடத்திலே ஏராளமிருக்கின்றன. நான் ஓர் இசுலாமியக் கல்லூரியிலே பேசுகிற காரணத்தால் ஏதோ இந்துப் புராணங்களைப் பற்றிக் கேலி பேசுகின்றேன்—ஏகடியம் செய்கிறேன என்று யாருங் கருதிக் கொள்ளக் கூடாது.

எங்கே மக்களை ஏமாற்றுகிற புராணக்கருத்துக்கள்—பழைமைக் கருத்துக்கள் இருந்தாலும், எங்கே மூட நம்பிக்கைக் கருத்துக்கள் இருந்தாலும், எங்கே மக்களை ஏமாளிகளாக்குகின்ற காரியங்கள் நடைபெற்றாலும் அவற்றை யெல்லாம் கண்டிக்கின்ற ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில், நான் எந்த மதத்தவன் என்று அடையாளங் காட்டப்படுகிறேனோ அந்த மதத்திலே இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிமை பெற்றிருக்கிறேன்! எந்த மதமானாலும் நல்ல வழி காட்டுகின்ற வகையில் அமைய வேண்டும் என்பது ஒன்றும் தவறே அல்ல.

இது யாரையும் தனிப்பட்ட முறையிலோ அல்லது குறிப்பிட்ட ஒரு சாராரைச் சுட்டிக்காட்டுவதற்கோ எடுத்துச் சொல்லுகின்ற கொள்கைகள் அல்ல.

எதற்கு இந்த நாட்டிலே காரணம் சொல்லாமல் இருந்தார்கள்? ஆண்களுடைய கழுத்தில் முட்டான ஓர் எலும்புத் துண்டு இருக்கிறதே அதற்கு ஒரு காரணஞ் சொல்லாமலா இருந்தார்கள்?

ஒரு காலத்திலே தேவர்களும் அசுரர்களும் மேரு மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைத் தாம் பாகவும் கொண்டு தேவர்கள் பாம்பின் வால் பக்கத்தை யும் அசுரர்கள் அதன் தலைப் பக்கத்தையும் பிடித்துக் கொண்டு கடலைக் கடைந்தார்கள் என்றும், அப்பொழுது கடலிலேயிருந்து அமுதமும் வந்தது; விஷமும் வந்த தென்றும், விஷம் பொங்கிஞல் உலகமே அழிந்துவிடு மென்று பயந்து சிவபெருமானிடம் முறையிட உடனே அவர் அந்த விஷத்தை எடுத்துத் தானே உண்டார் என்றும், அதைப்பார்த்த பார்வதி விஷம் உள்ளே போய் விட்டால் தன் கணவன் இறந்துவிடுவாரோ என்று பயந்துபோய் அவருடைய கழுத்தைக் கெட்டியாகப் பிடித்து விஷம் உள்ளே போகாமல் பார்த்துக் கொண்டாள் என்றும், அந்த விஷம் சிவனுடைய தொண்டைக் குழியிலேயே தங்கிவிட்டதென்றும் அது தான் ஆண்களுக்கெல்லாம் தொண்டையிலே இருக்கின்ற முடிச்சு போன்ற எலும்பு என்றும் புராணம் எழுதப்பட வில்லையா?

இவைகளையெல்லாம் நாம் நம்பிஞல்—இந்தக்கார ணங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டால் இந்தச் சமுதாயம் முன்னேற முடியும் என்று நீங்கள் நம்பு கின்றீர்களா?

ஆண்களுக்கு மீசை தாடி இருக்கிறது. மழித்துக் கொண்டால் வெளியில் தெரியாது. ஆனல் பெண்களுக்கு

இயற்கையாகவே மீசை, தாடி கிடையாது. அதற்கும் காரணம் கூற ஒரு புராணம்-விப்ர புராணம் இருக்கிறது.

மாண்டவியர் என்று ஒரு ரிஷி. அவருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு பெண் குழந்தை. அது வளர்ந்து பருவ மெய்தியிருக்கும் போது மாண்டவியருக்கும் அவர் மனைவிக்கும் பூலோகத்தைச் சுற்றிப்பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்தமையால் தேவலோகத்தில் இருந்து அவர்கள் தங்களுடைய பெண்ணை யாரிடமாவது பாது காப்பாக ஒப்படைத்து விட்டுச்சென்று, திரும்ப எண்ணு கிறார்கள். யாரிடத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்லலாம் என்று சிந்திக்கிறார்கள், ஒவ்வொரு தேவனுக எண்ணு கிறார்கள். அது ஆபத்து; -து ஆபத்து என்று கருதி கடைசியாக எமன்தான் தகுதியானவன் என்ற முடிவிற்கு வந்து, அவனிடம் தங்கள் மகளாகிய பருவமங்கையை மாண்டவியரும் அவருடைய மனைவியும் ஒப்படைத்து விட்டுப் பூலோகத்திற்குப் போய் விடுகிறார்கள்.

அவர்கள் போன பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்த எமன் அவள் அழகாகத்தான் இருக்கிறாள் என்று பார்க்கிறான்; அவனுக்கும் ஏதோ எண்ணம் பிறக்கிறது. இருந்தாலும் நல்லவனென்று பெயர் எடுத்திருப்பதால் விஷயம் வெளியே தெரியாமல் இவளோடு நாம் விளையாட வேண்டும் என்று ஆசைப்படுகிறான். எம தர்மராசன் இந்த விஷயம் வெளியே தெரியாமல் காரியம் நடத்த வேண்டும் என்பதற்காகப் பகல் நேரமெல்லாம் அந்தப் பருவ மங்கையை விழுங்கி வயிற்றிலே வைத்துக் கொண்டு இரவில் அந்தப்புரத்தில் அவளை வெளியே உமிழ்வான்; இருவரும் இன்பமாக இருப்பார்கள். மறுபடியும் பகலில் அவளை விழுங்கி விடுவான். இப்படித் தொடர்ந்து நடக்கிறது.

ஒரு நாள் நீராட அருவிக்குச் சென்றான். நீராடும் போது வயிற்றிலே கனம் இருக்கக் கூடாது; அது உடல் நலத்துக்கு உகந்ததல்ல என்ற காரணத்தால்

அவளை ஓர் மண்டபத்திலே உமிழ்ந்து வைத்து விட்டு இவன் போய் நீராடிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அக்கினி பகவான் அப்பெண் தனியாக இருக்கும் மண்டபத்தின் பக்கம் வந்தான். அவன் அவளைப் பார்த்தான்; அவளும் பார்த்தாள். கண்ணோடு கண்ணினை நோக்கின் பிறகு வாய்ச்சொற்கள் தேவை யில்லையல்லவா? இருவரும் கூடினர்கள். அப்படிக் கூடிய நேரத்தில் எமன் திரும்பி வந்து விட்டமையால் அவன் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக அந்தப் பெண் அக்கினியை எடுத்து விழுங்கிவிடடாள். எமன் அவளை விழுங்கிப்போய்விட்டான். இபபொழுது எமன் வயிற் றிலே பெண்; பெண் வயிற்றிலே அக்கினி பகவான்!

அக்கினி இல்லாவிட்டால் என்ன ஆவது உலகத்தில்? எதிலுமே தீப்பற்றவில்லை; அடுப்பை மூட்ட முடிய வில்லை. உலகமே தவிக்கிறது. எல்லோரும் முறையிடு கிறார்கள். அக்கினியின் நண்பனை வாயுபகவான் விஷயத்தைப் புரிந்து கொண்டான். சரி. அக்கினியை வெளிப்படுத்துகிறேன் என்று கூறித் தேவர்களுக் கெல்லாம் ஒரு விருந்து வைத்தான். அதற்குள் மாண்ட வியரும் அவர் மனைவியும் திரும்பி விட்டார்கள், அவர்களும் விருந்துக்கு வந்திருந்தார்கள்.

விருந்துக்கு வந்த எமனுக்கு அருகில் வாயுவுக்கு இலை போடப்பட்டது. எமதர்மனுக்கு மாத்திரம் மூன்று இலைகள் போடப்பட்டன. எமன் ஆத்திரப்பட்டுக் கேட்டான்; எனக்கு மாத்திரம் ஏன் மூன்று இலை என்று.

வாயுதேவன் எமதர்மனைப் பார்த்து "உன் வயிற் றிலிருக்கும் பெண்ணைக் கக்கு! அவளுக்காக ஓர் இலை" என்றான். எமன் வேறு வழியில்லாமல் அந்தப் பெண்ணைக் கக்கினான். சரி-இரண்டு இலை; மூன்றுவது ஓர் இலை எதற்காக என்று எமன் ஆத்திரத்தோடு கேட்டான். உடனே வாயுபகவான் அந்தப்பெண்ணைப்

பார்த்து; பத்தினித் தங்கமே! உன் வயிற்றிலிருக்கும் என் நண்பன் அக்கினியை வெளியே அனுப்பு என்றான். அந்தப் பெண் அஞ்சிப் பெற்றோருக்கும் மற்றோருக்கும் இடையே இப்படி அவமானப்பட நேர்ந்து விட்டதே என்று நடு நடுங்கி அக்கினியை வெளியே விட அக்கினியும் அஞ்சி நடுங்கிக் கொண்டே வெளியே வந்த காரணத்தால் அதற்கு முன்பே பெண்களுக்கு மீசையும் தாடியும் உண்டு, இப்பொழுது நடுங்கிக் கொண்டு வெளிவந்த அக்கினியால் அந்தப் பெண்ணின் மீசையும் தாடியும் பொசுங்கி விட்டது. அது முதல் பெண்களுக்கு மீசை தாடி இல்லை.

இப்படி நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான புராணங்கள் நம்முடைய தமிழகத்திலே இளைஞர்களையும்—முதியவர்களையும் கெடுத்து அதன் காரணமாக நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கான தெய்வங்கள்; அவற்றுக்கு வழிபாடுகள்; கோயில்கள் என்றெல்லாம் ஆகிவிட்டது.

நான் சொன்னால் உங்களிலே பலபேருக்குக் கருணாநிதி இப்படிச் சொல்லலாமா என்ற எண்ணம் வரும். பெரியார் சொன்னார் என்றால் அவர் அப்படித் தான் சொல்வார் என்று எண்ணக்கூடும் அண்ணா 'ஒன்றே குலம; ஒருவனே தேவன்' என்று சொன்னார் என்றால் அவருக்கென்ன வேலை என்று கேடகக்கூடும். திருமூலர் சொன்னார்; அதைத்தான் அண்ணா சொன்னார் என்றால், திருமூலர் சொல்லலாம்; 'நாம் சொல்லலாமா என்று கேட்கக்கூடும்.

"நட்ட கல்லைத் தெய்வமென்று
"நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து மொணமொணென்று
சொல்லு மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ
நாதனுள்ளிருக்கையில்"

என்று சிவவாக்கியர் சொன்னார் என்றால் 'சிவவாக்கியர் சித்தர்' அவர் சொல்லலாம்; நாம் சொல்லலாமா என்று பாரதியார் கேட்கக் கூடும்.

"உண்மையின்பேர் தெய்வமென்போம் மற்றும்
ஓதிடும் தெய்வங்கள் பொய்யென்றுரைப்போம்"

—என்று பாடவில்லையா?

எனவேதான் ஆயிரக்கணக்கான தெய்வங்கள்—தெய்வங்களின் பெயரால் ஏமாற்று வேலைகள் இவைகள் தேவையில்லை. அண்ணா சொன்னதைப்போல 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்—அந்த மார்க்கம் நன்மார்க்கம்—நம்முடைய மனசாட்சிப்படி, உண்மைப்படி ஏற்றவாறு நடந்து கொள்வதுதான் இந்த நாட்டில் பகுத்தறிவையும் அந்தப் பகுத்தறிவிலே விளைகின்ற பொருளாதார மாற்றங்களையும் அந்தப் பொருளாதாரத்தினுடைய பயனை அனுபவிக்கின்ற பக்குவத்தை மக்களுக்கு ஏற்படுத்துகின்ற அரசியல் நிலையையும் அதன் காரணமாக உருவாகிற ஓர் ஆட்சியே கூடநல்ல முறையிலே செழித்து வளர்வதற்கும் காரணமாக ஆகக் கூடும். அந்தக் காரணத்தினாலேதான் மறுமலர்ச்சி; சமுதாயத்திலே ஏற்பட்டாக வேண்டுமென்றும் பணிபுரிகிறோம். அதுவும் நம்முடைய தமிழகச் சமுதாயத்தைப் பொறுத்த வரையிலே மறுமலர்ச்சிமாத்திரம் ஏற்பட்டால் போதாது. எழுச்சியும் ஏற்பட்டாக வேண்டும்.

பக்கத்திலே கடல் தாண்டினால்—இன்றைக்குக் காலையிலே செய்தி படிக்கிறேன். ஒன்பது தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று அங்கே நம்முடைய தமிழினம் மாண்டுக் கொண்டு இருக்கிறது. இன்னும் ஒரு மாதக் காலத்திற்குப் பிறகு தமிழினம் இருக்குமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இங்கே கவிதை படித்தவர்கள் 'கருணாநிதி ஒரு கேள்விக்குறி' என்று சொன்னார்கள். கருணாநிதி

கேள்விக்குறி அல்ல. கருணாநிதிக்கும் தமிழகத்திலே இருக்கிற ஐந்துகோடி தமிழர்களுக்கும் இன்றைக்கு இலங்கைத் தமிழினம் கேள்விக்குறியாக ஆகியிருக்கிறது. அந்தக் கேள்விகளுக்கு என்ன விடை காணப்போகிறோம்? செத்துக் கொண்டிருக்கின்ற தமிழனே மானமழிந்து கொண்டிருக்கின்ற தமிழச்சியை—நாளும் நாளும் சுக்கல் சுக்கலாக பிளந்தெறியப் படுகின்ற மழலைகளைக் காப்பாற்ற நாம் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன? இதுதான் இன்றைக்கு நம்முன்னுல் எழுந்து நிற்கின்ற மாபெரும் கேள்விக்குறி!

அந்தக் கேள்விக்குறிக்கு விடைகாண உங்களை யெல்லாம் அழைக்கின்ற காலம் வரும்; அழைக்கும் போது நீங்கள் வரத் தயங்காதீர்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றி னார்கள்.

★

2

புள்ளிகள்

உலக வரலாற்றில் அழிக்க முடியாத பெரும் புள்ளிகள் பலர் உண்டு! மாணவச் செல்வங்கள் அந்தப் புள்ளிகள் வரிசையில் இணைய வேண்டும் என்கிற ஆசையோடு பணி யாற்றுவீர் என்று, சென்னை, தாயபரம் கிறித்துவக் கல்லூரியில் "புள்ளிகள்" எனும் தலைப்பில் ஏப்ரல் 15, 1966ல் பேருரையாற்றிய தலைவர் கலைஞர் கூறினார்!

தலைவர் கலைஞர் அவர்களது உரை வருமாறு:

இன்று சென்னை கிறித்துவக் கல்லூரி தமிழ் பேரவை யின் சார்பில் நடைபெறுகின்ற முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடை கின்றேன். இந்த கல்லூரியினுடைய நூறுவது ஆண்டு விழா அடுத்த ஆண்டு நடைபெறுகிறது என்று அறிவித்து அந்த விழாவிலும் நான் கலந்து கொள்ளவேண்டுமென்ற ஆசையினை எனக்கு முன்னால் பேசிய கல்லூரி முதல்வர் அவர்களும் மற்றும் பேராசிரியர் பெருமக்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள்.

தம்பி துரைமுருகன் குறிப்பிட்டதைப்போல கிறித்துவக் கல்லூரிக்கு நான் பலமுறை இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்வதற்காக வந்துள்ளேன். இது தமிழகத்திலே சிறப்பு மிகுந்த கல்லூரிகளிலே ஒன்று என்பதை துரைமுருகன் இங்கே குறிப்பிட்டு இங்கே ராஜாஜி படித்தார், இராதாகிருஷ்ணன் படித்தார் என் றெல்லாம் சொன்னார் நீங்கள் இப்பொழுது எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் நாமும்தான் இங்கே படிக்கிறோம் என்று; அது கூட இந்தக் கல்லூரிக்கு வாய்த்த சிறப்பு தான்.

நீங்கள் படிக்கின்ற காலகட்டத்திலே நான் உங்களை சந்திப்பது எனக்கு வாய்த்துள்ள ஒரு நற்பேறுதான். இன்று இந்த நிகழ்ச்சிக்கு என்னை ஒப்புதல் வழங்குமாறு வலியுறுத்திக்கேட்ட தம்பி துரைமுருகன் வர இயலுமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒன்றுக இருந்தது. ஏனென்றால் அவர் விபத்து ஒன்றில் நேற்று காலையிலே சிக்கி பலரும் அந்தப் பேருந்திலே இருந்தவர்கள் பலத்த காயங்களுக்கு ஆளாக நேரிட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிற நேரத்தில் அவர் சொற்ப காயங்களோடு தப்பித்து இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கின்ற நல்ல வாய்ப்பை அவரும் பெற்று நமக்கும் வழங்கியிருக்கின்றார்.

உடலிலே கைகளிலும் கால்களிலும் கட்டுக்களை போட்டுக் கொண்டு அவர் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வது என்னை அழைத்து விட்டு தான் வராமல் இருந்தால் அது மற்றவர்களால் குறை கூறப்படக் கூடிய ஒன்றுக இருக்கும் என்று ;எண்ணி மாத்திரம் அல்ல; அவர் குறிப்பிட்டாரே இரு பத்தி ஐந்து ஆண்டு காலமாக கருணாநிதியை குருவாக ஏற்றுக் கொண்டு நான் மாணவனுக இருக்கிறேன் என்று. இதுபோன்ற விபத்துக்களில் சிக்கி உடல் நலிவுகள் ஏற்பட்ட காலத்திலும் நான் மக்களுக்கு, நாட்டிற்கு, சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய தொண்டிலிருந்து சிறிதும் பின் வாங்கவில்லையென்ற அந்தப் பாடத்தை என்னிடத்திலே துரைமுருகன் மிக ஒழுங்காக கற்றிருக்கிறார் என்பதற்கு அடையாளமாகத் தான் இந்த நிகழ்ச்சியிலே அவர் கலந்து கொண்டிருக்கிறார் என்று நான் கூற விரும்புகின்றேன்.

நான் வீட்டிலேயிருந்து இங்கே புறப்படும்பொழுது துரைமுருகன் வந்தார்; என்ன விழுப்புண்களோடு வந்து பேசப் போகிறாயா என்று கேட்டேன். ஆமாம் என்றார். இதே நிலை எனக்கு ஏற்பட்டு யாராவது கேட்டிருந்தால் விழுப்புண்களோடு அல்ல; விழுந்த புண்களோடு என்று சொல்லியிருப்பேன். ஆனால் அவர் சொல்லவில்லை.

இருந்தாலும் விழுந்து எழுந்தும் துரைமுருகன் உங்கள் முன்னால் இந்தக் கல்லூரியினுடைய சிறப்புகளை யெல்லாம் கூறிவிட்டு நான் என்ன தலைப்பிலே பேச இருக்கிறேன் என்பதற்கு 'புள்ளி'யும் வைத்துவிட்டு போய் விட்டார்.

தலைப்பு கொடுத்தது நான். அதைக் கொஞ்சம் திருடப் பார்த்து அவர் இங்கே கொஞ்சம் புள்ளி வைத்து விட்டு போயிருக்கிறார். புள்ளி வைத்த பிறகு கோலம் போட வேண்டிய வேலை என்னுடைய வேலையாக ஆகியிருக்கிறது.

புள்ளி எங்கே இடம் பெறும் என்று ஒரு உதாரணத் தைச் சொன்னார். நான் ஊர் சென்றேன் என்று கூறி 'சென்றேன்' என்பதற்குப் பிறகு ஒரு புள்ளி வைக்கி றேமே; அதுதான் ஒரு புள்ளி என்று சொன்னார்.

தவறு தம்பி தவறு. ஒரு புள்ளி அல்ல.

நான் ஊர் சென்றேன் என்று எழுதிப் பார்த்தால் நான் என்பதிலே 'ன்' என்ற எழுத்துக்குமேல் ஒரு புள்ளி. பிறகு ஊர் என்பதில் 'ர்'க்குமேல் ஒரு புள்ளி. சென்றேன் என்பதில் முதலில் உள்ள'ன்'க்கு மேல் ஒரு புள்ளி. அதற்கு மேல் அடுத்துள்ள 'ன்' க்கு மேல் ஒரு புள்ளி. ஆக நாலு புள்ளியும் பிறகு இறுதியாக வைக்கின்ற முற்றுப்புள்ளியும் சேர்ந்து ஐந்து புள்ளி.

ஒரு புள்ளி அல்ல. இந்தப் புள்ளிகளைப்பற்றி கிறித்துவக்கல்லூரி மாணவர்கள்; வழக்கம்போல் அவசரப் பட்டு கணக்குப் போட்டு விடக்கூடாதே என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல.

இந்தப் பேரவையிலே நான் சிறப்புரை ஆற்றவேண்டு மென்று கேட்ட பொழுது பக்கத்திலே இருந்த எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர் கள் எந்தக் கல்லூரி என்று கேட்ட நேரத்தில் கிறித்துவக் கல்லூரி என்று விடை தந்தனர்.

என்ன தலைப்பு என்று கேட்டபொழுது நானேதான் 'புள்ளிகள்' என்ற தலைப்பிலே பேசுகிறேன் என்றேன். சொல்லும்பொழுது புள்ளிகள் என்ற தலைப்பிலே பேசுகிறேன் என்று சொல்லிவிட்டேன். அதற்குப்பிறகு தமிழ் அகராதிகளை யெல்லாம் புரட்டிப் பார்த்தேன். புள்ளி என்பதற்கு புள்ளி என்கின்ற பொருள்தான் இருக்கிறதா? வேறுபொருள் உண்டா என்றெல்லாம் புரட்டிப் பார்த்தேன். புள்ளி என்பதற்கு மெய்யெழுத்து என்கின்ற ஒரு பொருள் உண்டு. புள்ளி என்பதற்கு முற்றுப் புள்ளி என்கின்ற ஒரு பொருள் உண்டு. புள்ளி என்பதற்கு இமயம் என்று ஒரு பொருள் உண்டு. புள்ளி என்பதற்கு நண்டு என்று ஒரு பொருள் உண்டு. புள்ளி என்பதற்கு பல்லி என்று பொருள் உண்டு.

நம்முடைய பேராசிரியர் ராபர்ட் குருசாமி அவர்கள் பேசும்பொழுது குறளோவியம், சங்கத் தமிழ் இலக்கியங்களை யெல்லாம் எளிய நடையில் நான் தருவதாக இங்கே குறிப்பிட்டார்களே; அந்த முயற்சியிலே நான் ஈடுபட்டு சங்கத்தமிழ் இலக்கியங்களை நான் படிக்கிற கால கட்டத்தில் ஒரு இலக்கிய பாடலில் புள்ளி என்கின்ற சொல் வந்தது.

'புள்ளிக்கள்வன்' என்று சொல்! அந்தப் புள்ளிக்கள்வன் என்ற சொல்லுக்கு நண்டு என்று சங்க இலக்கியத்திலே பொருள் கூறப்படுகிறது. கள்வன் என்பதற்கு நண்டு என்று பொருள். அது புள்ளிகள் பொருந்திய நண்டாக இருக்கின்ற காரணத்தால் புள்ளி என்றாலும் புள்ளிக்கள்வன் என்றாலும் நண்டு என்று தான் பொருள் என்று அந்த இலக்கியத்திற்கு விளக்க உரை எழுதியிருப்பவர்கள் விரித்து கூறியிருக்கின்றார்கள்.

'ஐங்குறு நூறு' என்ற சங்க இலக்கியத்தில் ஒரு அழகான பாடல். தன்னுடைய காதலன் தன்னை விடுத்து வேறு ஒருத்தி மனை புகுந்து மனைவியினுடைய ஊடல் காரணமாக அந்த வேறொருத்தியினுடைய தொடர்பை

அறுத்துக்கொண்டு மீண்டும் தன் மனைக்கு வந்து விடு கிருன். வநது அந்தத் தொடர்பை அறுத்துக்கொண்டேன் என்று தெளிவாகச் சொல்லுகிருன். அப்படித் தெளி வாகச் சொன்ன பிறகும்கூட மனைவியினுடைய கண்ணிலே ஏற்பட்ட பசப்பு-பசலை நிறம் மாறவில்லை.

அவன் தொடர்பை அறுத்துக் கொண்டதாக தெளி வாகச் சொல்லுகிருன். சொல்லியுங்கூட என் கண் கலக்கம் தீரவில்லையே; என் செய்வது என்கிருள். அதைத் தான் 'ஐங்குறு நூறு' பாடலாகத் தருகிறது.

''முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்
புள்ளிக்கள்வன் ஆம்பல் அறுக்கும்
தண்டுறை யூரன் தெளிப்பவும்
உண்கண் பசப்ப தெவன் கோலன்னுய்?''

நீர்முள்ளிச் செடிகள் நீண்டு வளர்ந்துள்ள பழைய நீர் தேங்கியுள்ள அடைபட்ட கரையின்சண், புள்ளிகளை யுடைய நண்டு, அந்த நீரில் பறந்து கிடக்கும் ஆம்பலின் தண்டினை அறுக்கும் குளிர்ந்த நீரையுடைய ஊரைச் சேர்ந்தவன். நான் தெளியும்படியாக அந்தத் தொடர்பை அறுத்துக் கொண்டேன் என்று சொல்லியுங்கூட என் கண்கள் கலக்கத்தில் இருந்து விடுபடவில்லை. பசந்து வேறு பட்டது ஏனே தெரியவில்லை என்பதாக ஐங்குறுநூறு கூறுகிறது.

அதில் உள்ள நயம் என்னவென்றுல் 'புள்ளிக் கள்வன்' ஆம்பல் அறுக்கும்; தம்முடைய காதலன் வாழ்கின்ற ஊரைப்பற்றி சொல்லும்பொழுது நீரிடையே படர்ந்திருக் கின்ற அல்லியினுடைய தண்டை நண்டு அறுக்கிறதல்லவா அந்த ஊரைச் சேர்ந்தவன் என்னுடைய காதலன் என்கிருள்.

எதற்காகத் தெரியுமா? எப்படி அல்லித்தண்டை நண்டு தன்னுடைய வாயிலே உள்ள அந்த கூரிய கொடுக்கு போன்ற கருவியால் துண்டித்து வெட்டி விடுகிறதோ

அதைப்போல் என்னுடைய காதலனும் இன்னொருத்தி தொடர்பை துண்டித்து வெட்டிவிட்டான் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில்; இந்தப் பாடல் உள்ளது. இந்த இடத்திலே ஒரு புள்ளி வருகிறது; அதுதான் புள்ளிக் கள்வன் என்கின்ற அந்த நண்டினை குறிப்பிடுகின்ற அந்த சொல் இலக்கியத்திலே இடம் பெறுகிறது.

மற்றொரு இடத்தில் புள்ளி என்பதற்கு பல்லி என்றும் என்று பொருள் உண்டு சொன்னேன் அல்லவா; அதற் கொரு பாடல் குறுந்தொகையிலே வருகிறது.

''உள்ளார் கொல்லோ தோழி கள்வர் தம்
பொன் புனை பகழி செப்பங் கொண் மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந்தோரே''

தன்னுடைய கணவன் தன்னைப் பிரிந்து கள்ளிக்காடு நிறைந்த ஒரு காட்டு வழியாக போய்க் கொண்டிருக்கி றான். அப்படிப் போய்க் கொண்டிருக்கின்ற கணவனுக்கு இவள் நினைவு வருமா என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு அவளே பதில் சொல்கிறாள். வரும்; எப்படி வருமென்றால் அந்தக் கள்ளிக்காட்டில் ஆண்பல்லி பெண் பல்லியை நேசத்தோடு அழைக்கும். அழைக்கும்போது ஒரு ஓசையை எழுப்பும். அந்த ஓசை எப்படி இருக்குமென் றால் வீரர்கள் தங்களுடைய அம்பு நுனி சரியாக இருக்கிறதா என்று நகத்தால் நெருடிப் பார்ப்பார்களே அதைப்போல அந்தப் பல்லி ஓசை இருக்கும்.

அந்த ஓசையைப் போன்ற ஓசை எழுப்புகின்ற ஆண் பல்லியையும் பெண் பல்லியையும் பார்த்தாவது என் னுடைய கணவனுக்கு; இந்தப் பல்லிகளுக்கே இவ்வளவு காதல் இருக்கிறதே நாம் நம்முடைய மனைவியை விட்டுப் பிரிந்து போகிறோமே என்ற எண்ணம் ஏற்படாதா?

என்று இவள் ஆதங்கப்படுகிறுள் என்று குறுந்தொகை கூறுகிறது. எனவே பல்லி இந்த செய்யுளிலே முதல் இடம் பெறுகிறது. எனவே பல்லி என்றுலும் புள்ளி என்றுலும் ஒரே பொருள்தான் என்ற காரணத்தால் புள்ளி இந்தச் செய்யுளிலேயும் இடம் பெறுகிறது என்பதை எடுத்துக் காட்டினேன்.

அடுத்து இந்தப் புள்ளிகளைப்பற்றி ஆராயவேண்டு மானுல் இரண்டை ஒப்பிட வேண்டும். புள்ளிகளையும் பூஜ்ஜியங்களையும் ஒப்பிட வேண்டும்.

இப்போதுள்ள ஆட்சியில் பூஜ்ஜியம் தினம் தினம் பத்திரிகைகளில் அடிபடுவதெல்லாம் உங்களுக்குத் தெரி யும்.

பூஜ்ஜியத்திற்கு என்று தனிமதிப்பு கிடையாது; அந்த பூஜ்ஜியத்திற்கு முன்னுல் ஒரு எண் இருந்தால்தான் அந்த பூஜ்ஜியத்திற்கு மதிப்பு உண்டு என்றெல்லாம் ஏடு களில் படிக்கிறீர்கள்.

நான் இங்கே சொல்ல வருவது அந்த அரசியல் விவகாரங்களை குறித்து அல்ல.

ஆனுல் புள்ளிக்கும் பூஜ்ஜியத்திற்கும் உள்ள வேறு பாடு என்னவென்றுல் பதினைந்து என்று எழுதி பக்கத் திலே ஒரு பூஜ்ஜியத்தை—சுழியை—சைபரை போட்டு விட்டால் அது நூற்றி ஐம்பது ஆகிவிடும். ஆக ஒரு பூஜ்ஜியம் ஒரு எண்ணின் மதிப்பை உயர்த்தும். பக்கத் திலே பூஜ்ஜியம் பூஜ்ஜியமாக போட்டுக் கொண்டே சென்றுல் பதினைந்து லட்சம் ஆகிவிடும். பதினைந்து கோடிகூட ஆகிவிடும்.

ஆனுல் புள்ளிக்கு இருக்கின்ற சிறப்பு என்னவென்றுல் பதினைந்து என்று எழுதி ஒன்றிற்கும் ஐந்திற்கும் இடை யிலே புள்ளி வைத்துவிட்டால் அது 1.5-அதாவது $1\frac{1}{2}$ என்று ஆகிவிடும். ஆக இந்தப்புள்ளி ஒன்றின் மதிப்பை பகுத்துப் பார்க்கும் நேரத்தில் சில பேர் சரியாக பகுத்துப் பார்க்காமல், தவறிவிடுவது உண்டு. ஒன்றிற்கும் ஐந்திற்

கும் இடையிலே வைக்கப்படுகின்ற புள்ளி பதினைந்து என்ற எண்ணை 1.5 அதாவது 1½ என்று ஆக்கிவிடும்.

ஒரு ஆராய்ச்சி கூட உண்டு. பூஜ்ஜியம் முதலிலே எங்கே உருவானது? பூஜ்ஜியம் என்பது அராபிய நாட்டிலே முதலில் கண்டுபிடிக்கப்பட்டு பரவியதா? அல்லது இந்தியாவிலே முதலில் கண்டுபிடிக்கப்பட்டு பரவியதா? என்றெல்லாம் கூட மேதைகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் புள்ளிகள் உலகம் தோன்றிய காலம் தொட்டு இருக்கின்றன. புள்ளி இல்லாமல் எதுமே இல்லை.

ஒரு கோடு கிழிப்பதாக இருந்தால் கூட முதலிலே ஒரு புள்ளியில் தொடங்கித்தான் கோடு கிழிக்க முடியுமே தவிர தனியாக கோடு கிழித்து விடமுடியாது. ஒரு கோடு கூட புள்ளியிலிருந்து தான் ஆரம்பமாகும்.

கவிதை நடையிலே சொல்ல வேண்டுமானால் அல்லது புதுக்கவிதை நடை உங்களுக்கு பிடிக்கும் என்பதால் அந்த நடையிலே சொல்ல வேண்டுமானால், இயற்கைப் பெண் வானத்திலே நட்சத்திரங்களை புள்ளிகளாக வைத்தாள்.

ஆனால் கோடுபோட்டு கோலமிட மறந்தாள்.

மறந்த காரணத்தால் கோலமாவு வானத்தில் இருந்து பூமியில் சிதறியது. அந்த மாவுதான் நிலவின் ஒளி.

இது புதுக்கவிதையாகக்கூட இருக்கலாம்.

நம்முடைய உலகத்திலே தொன்மை வாய்ந்த மொழிகள் என்று சொல்லப்படுகின்ற மொழிகளான ஹிப்ரு மொழி ஆனாலும், பாபிலோனியா மொழியானாலும், பொனீசியன் மொழியானாலும், நபிகள் நாயகம் பேசியதாக சொல்லப்படுகின்ற அராபிக் மொழியானாலும், ஏசுநாதர் பேசியதாக சொல்லப்படுகின்ற அராமிக் மொழியானாலும், இந்த மொழிகளுக்குத்தான் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்ற பிரிவினைகளும் அந்த மொழி எழுத்துக்கள் புள்ளிகளைக் கொண்டவைகளாக இருந்தன

என்பதும், அதைப் போலவேதான் அவ்வளவு பழமையும், தொன்மையும் வாய்ந்த மொழியாக இருக்கிறதென்பதும் அந்த தமிழ் மொழிக்கும் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்று உண்டு என்பதும் அதிலே மெய் எழுத்துக்களுக்குப் புள்ளிகள் உண்டு என்பதும் நாம் மிகத் தெளிவாக அறிந்த ஒன்றாகும்.

'க்' மெய்யெழுத்து, 'அ' உயிர்எழுத்து. 'க' என்ற எழுத்திலே ஒரு புள்ளி வந்தால் அது மெய்யெழுத்து! அதோடு 'அ' என்ற உயிர் சேரும்போது 'க' என்ற உயிர் மெய் எழுத்தாக ஆகின்றது. ஆகவே ஒரு புள்ளிதான் மெய்யை உருவாக்கி அந்த மெய் உயிரோடு சேர்ந்து உயிர் மெய் ஆகிறது.

உயிர் தனியாக இயங்க முடியாது. மெய்யும் தனியாக இயங்கமுடியாது. இரண்டும் சேருகிற நேரத்திலேதான் அந்த உயிரும் மெய்யும் சேருகிற நேரத்திலேதான் இயங்க முடிகிறது.

சிலர் உயிர் தனியாக இயங்கக் கூடியது. உடலை விட்டு போனால் கூட உயிர் தனியாக இயங்கும். அது வேறொரு உடலில் புகுந்து கொள்ளும். அது புகுந்து கொள்கிற வரையிலே ஆகாயத்திலே உலாவிக் கொண்டிருக்கும். அதுவரையிலே அதற்கு இந்த தானம், தர்மம் ஆண்டு தோறும் திவசம் இவைகளெல்லாம் கொடுத்து— புரோகிதர்கள் மூலமாக அனுப்பப்படுகின்ற பொருட்கள் எல்லாம் அவர்களுக்குப் போய் சேரும் என்ற நம்பிக்கையும் நமக்கு ஊட்டப்படுகின்றது.

அதே நேரத்தில் போன உயிர் இன்னொரு இடத்திலே போய் பிறந்து விட்டது என்கின்ற இன்னொரு நம்பிக்கையும் நமக்கு ஊட்டப்படுகிறது. இந்த இரண்டு நம்பிக்கைளும் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதை பார்க்கிறோம்.

பிரிந்த உயிர் ஆகாயத்தில் இருக்கிறது. பாவம் செய்த உயிரானால் நரகத்தில் இருக்கிறது. புண்ணியம்

செய்த உயிரானுல் சொர்க்கத்திலே இருக்கிறது. அந்த உயிருக்கு சாந்தி கிடைப்பதற்காக நாம் இங்கே புரோகிதர்களை கொண்டு ஆகவேண்டிய கருமங்களைச் செய்ய வேண்டுமென்பது ஒரு வகை நம்பிக்கை!

இல்லை; இல்லை—அந்த உயிர் வேறொரு உடலிலே புகுந்தது. அல்லது வேறொரு உருவெடுத்து விட்டது என்பது இன்னொரு வகையான நம்பிக்கை.

இதிலே வருகின்ற முரண்பாடு; நாம் நம்புவதைப் போல இந்த உயிர் இன்னொரு உடலிலே கலந்து இன்னொரு உருவமாக ஆகிவிட்டால், நம்மால் புரோகிதர்கள் வழியாகவோ அல்லது வேறு குருநாதர் வழியாகவோ அனுப்பி வைக்கப்படுகிற பொருள் எல்லாம் எங்கே போகிறது என்ற கேள்வி பிறக்கிறது.

உயிர் இருக்கிற வரையிலே மனிதன் உயிர் போய் விட்டால் பெயரே பிணம் என்று மாறுகிறது. அதைப் போல தான் உயிர் தனியாக இயங்க முடியாது. உடலிலே இருக்கின்ற பல்வேறு கூறுகள் அத்தனையும் கலந்துதான் உயிர் ஒன்று இருக்கிறதேயல்லாமல் அது தனித்து இயங்குவது அல்ல.

எனவே உயிரும் மெய்யும் இணைந்து இயங்குவதை நம்முடைய எழுத்தின் மூலமாகவே நாம் இன்றைக்கு புரிந்து கொண்டிருக்கிறோம்.

இந்தப் புள்ளி இருக்க வேண்டிய இடங்களில் இருக்க வேண்டும். இந்தப்புள்ளி, மானுக்கு இருந்தால் அது புள்ளி மான் ஆகிறது. அழகாக இருக்கிறது. மயிலுக்கு தோகையிலே இருந்தால் அது அழகாக இருக்கிறது. ஆக மானுக்கு இருக்கிறதைப்போல புள்ளி, மயிலுக்கு இருக்கிறதைப் போல புள்ளி, எனக்கும் இருக்க வேண்டுமென்று மனிதன் எண்ணினுல், அப்படி புள்ளிகள் உடலிலே ஏற்பட்டால் புள்ளி உள்ள மனிதனைப் பார்த்து "அழகான வெண் புள்ளிகள் உடல் எல்லாம் இருக்கிறது?" என்று யாரும் பாராட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். "அய்யோ

பாவம் வெண்குட்டமல்லவா வந்திருக்கிறது!'' என்று சொல்வார்கள்.

எனவே புள்ளியும் இருக்க வேண்டிய இடத்தில்-இருக்க வேண்டிய நிறத்தில் இருக்க வேண்டும்.

ஆரணங்குகள், அழகான செந்தாமரை முகத்தில் வேண்டுமென்றே ஒரு கரியபுள்ளி வைத்துக் கொள் வார்கள்.

அந்த சிவந்த கன்னத்தை மேலும் அழகுபடுத்தி காட்டுவதற்காக அப்படிக் கரும்புள்ளியை வைத்துக் கொள்வது அவர்களுக்கு விருப்பமான ஒன்று!

ஆகவே புள்ளி அழகை ஊட்டுவதற்கும் பயன்படு கிறது. அதே நேரத்திலே புள்ளி சில நேரங்களில் இடங் களுக்கேற்ப மற்றவர்களினுல் அருவருக்கத் தக்க நிலையி லும் பயன்படுகிறது.

நான் புள்ளி என்கின்ற அந்த ஒன்றைப்பற்றி மாத்திரம் சொல்லிக்கொண்டே இருந்தால் உற்ற பயன் கிடையாதென்பது எனக்கு நன்முகத் தெரியும்.

தம்பி துரைமுருகன்; ஊரிலே எத்தனையோ புள்ளிகள் இருக்கிறார்கள் என்றெல்லாம் இங்கு குறிப்பிட்டார்.

பெரும் புள்ளிகள் இருக்கிறார்கள்; கரும்புள்ளிகள் இருக்கிறார்கள். இப்படி பல புள்ளிகள் ஊரிலே இருக் கிறார்கள்.

கரும்புள்ளி செம்புள்ளி என்பதை தனித்தனியாக பிரித்துப் பார்த்தால், தனித்தனியாக இரண்டும் அழத வாய்ந்ததுதான். ஆனல் ஒருவர் முகத்திலே கரும்புள்ளி செம்புள்ளி இரண்டையும் குத்தினுல் அவர் அந்த ஊருக்கு ஏதோ பெரிய தவறை இழைத்து விட்டார்; எனவேதான் அவர் முகத்திலே கரும்புள்ளி செம்புள்ளி இரண்டையும் குத்தி தண்டித்து விட்டார்கள் என்று பேசு வார்கள்.

பெரும்புள்ளி அது உயர்வுக்கும் பயன்படும். ஒரு ஊரிலே உள்ள பெரியவரைப் பார்த்து "ஏ! அப்பா! இந்த ஊரிலே இவர் பெரிய புள்ளி!" என்றும் இருபொருளும் வரும்! பாப்புலர் மேன், (popular man) நொட்டோரியஸ் மேன் (Notorious man) என்ற இந்த இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைப்போல, இந்தப் பெரிய புள்ளி என்பது நல்ல வரையும் குறிக்கும். கெட்டவரையும் குறிக்கும், தீய வரையும் குறிக்கும். பிரசித்தி பெற்றவர் என்றும், அவர் எதில் பிரசித்தி பெற்றவர் என்பதற்குக் கிடைக்கும் விடையைப் பொறுத்து, அவர் எப்படிப் பிரசித்தி பெற்றவர் என்பது தெரியும்.

அதைப் போலத்தான் உலகத்திலே காலகாலமாக இன்று வளர்ந்திருக்கின்ற விஞ்ஞானத் துறை ஆகட்டும் அல்லது அரசியல் துறை ஆகட்டும் அல்லது தத்துவத் துறை ஆகட்டும் அல்லது எழுத்துத்துறை ஆகட்டும் அல்லது வீரம் விளைக்கின்ற துறை ஆகட்டும் அல்லது கொள்கை போற்றுகின்ற துறை ஆகட்டும் இவைகளில் இந்த உலகத்திலே எத்தனையோ பெரும் புள்ளிகள் தோன்றினார்கள்.

அப்படி தோன்றிய காரணத்தினாலேதான், அவர்கள் தந்த செல்வத்தை அவர்கள் உருவாக்கிய படைப்புகளை அவர்களுடைய அறிவின் பயனாக விளைந்த விளைவுகளை - நாம் இன்றைக்கு இந்தத் தலைமுறையில் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் இதுவரை கற்றது போக மேலும் கற்று இந்த உலகத்திற்கு தர இருக்கின்ற செல்வங்கள், எதிர் காலத்திலே அடுத்து அடுத்து வருகின்ற தலைமுறைகளுக்கு பயன்படக்கூடியவைகளாக அமையும்.

நான் புதிதாக சொல்ல வேண்டியதில்லை உங்களுக்கு. ஒவ்வொரு விஞ்ஞான வித்தகர்களும் எப்படியெல்லாம் இன்னலுற்று இடையூறுகளை ஏற்றுக் கொண்டு விஞ்ஞானப் புதுமைகளை கண்டுபிடித்தார்கள்;

இன்றைக்கு உலக வரலாற்றில் பெரும் புள்ளிகளாகத் திகழ்கிறார்கள் என்பதை தயவுசெய்து உற்று நோக்க வேண்டும்.

கிறிஸ்து பிறப்பதற்கு இருநூற்றி எண்பது ஆண்டு களுக்கு முன்பு மிகப் பெரிய கணிதமேதை ஆர்க்கிமிடீஸ் இருந்தார்.

அவரைப் பற்றிய வரலாற்று குறிப்பை படித்தால் ஒரு நாள் சிசிலித்தீவில் அந்தப்பகுதி மக்களெல்லாம் வீதி யோரங்களில், தெருக்களில், கடைவீதிகளில் அமர்ந்து பல்வேறு காட்சிகளை கண்டு கொண்டிருந்தபோது ஆர்க்கிமிடீஸ் திடீரென்று அவர்களிடையே நிர்வாணமாக ஓடினார். இவர்களுக்கு எதுவும் புரியவில்லை.

எவ்வளவு பெரிய கணிதமேதை ஆர்க்கிமிடீஸ்; இவர் நிர்வாணமாக ஓடவேண்டிய அவசியம் என்ன என்று வியப்படைந்தார்கள். பிறகு விசாரித்தால் விபரம் தெரிந்தது.

அந்த ஊர் மன்னன் இந்த ஆர்க்கிமிடீஸிற்கு சற்று தூரத்து உறவினருங்கூட, ஹீரோ என்பது அவருடைய பெயர்.

அந்த ஹீரோ மன்னன் தனக்கு ஒரு கிரீடம் செய்வதற் காக பொற் கொல்லரிடத்திலே தங்கத்தை கொடுத்தான். அந்தப் பொற்கொல்லன் அந்த மன்னருடைய கிரீடத்தை செய்து கொடுத்தான்.

மன்னருக்கு ஓர் ஐயம்!

"நான் கொடுத்த தங்கம் முழுமைக்கும் இவன் கிரீடம் செய்து விட்டானா? அல்லது வேறு உலோகத்தை எவ்வளவு கலந்திருக்கிறான்?" என்பது தான் அந்த சந்தேகம்.

எனவே கணிதமேதை ஆர்க்கிமிடீஸை அழைத்து இவன் செய்து கொடுத்த கிரீடத்தில் பொன் எவ்வளவு

வேறு உலோகம் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு எனக் குச் சொல்ல வேண்டும் என்று ஆணையிட்டான்.

ஆர்க்கிமிடீஸ் சிந்தித்து சிந்தித்துப் பார்த்தான்.

கடைசிவரை அவனுக்கு எவ்வளவு தங்கத்தோடு வேறு உலோகம் சேர்க்கப்பட்டது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு அவனுக்கே ஒரு எண்ணம். ஒன்றோ டொன்றைச் சேர்க்கும் பொழுது இது எவ்வளவு அது எவ்வளவு என்பதை கண்டுபிடிப்பது எப்படி என்பதை தானே ஒரு கேள்வி கேட்டுக் கொண்டு ஆராய முற்பட்டான்.

அப்படி ஆராய்ந்து கொண்டிருந்தபோது ஒரு நீர்த் தொட்டியில் அமர்ந்து ஒருநாள் அவன் குளித்துக் கொண் டிருக்கும்பொழுது அவனுடைய கேள்விகளுக்கு விடை கிடைத்தது. அந்தவிடை கிடைத்தவுடன் தான் நீர்த் தொட்டிக்குள்ளே நிர்வாணமாக அமர்ந்திருப்பதை மறந்து விட்டு "கண்டுபிடித்து விட்டேன்! கண்டுபிடித்து விட்டேன்!" என்று தெருவழியே கூவியவாறு அரண் மனையை நோக்கி ஓடினான்.

என்ன கண்டுபிடித்தான் என்றால் நீருக்குள்ளே தான் அமுங்கி இருக்கும் பொழுது நீர்த்தொட்டியிலுள்ள தண்ணீர் அந்தத் தொட்டிக்கு வெளியிலே வழிகிற தல்லவா; அதிலிருந்து—ஒரு திடப்பொருள் ஒரு திரவப் பொருளுக்குள்ளே அமுக்கப்படும் பொழுது அந்தத் திரவப் பொருள் வெளியிலே கசியுமேயானால் அந்த அள விற்கு எடை உள்ளே தங்கியிருப்பதாக அர்த்தம் என்பதைக் கண்டுபிடித்து, அதிலேயிருந்து கலப்பு எவ் வளவு உண்மையான தங்கம் எவ்வளவு என்று கண்டு பிடிக்க முடியும் என்கின்ற அந்த விதியை வகுத்துக் கொண்டு அரசனிடத்திலே சென்றான். அரசன் அதற் குரிய பரிசைத் தந்தான்.

அது மாத்திரமல்ல. அவன் போர்ப்படைக்கருவி பலவற்றையும் கிறிஸ்து பிறப்பதற்கு இருநூறு ஆண்டு களுக்கு முன்பே தன் மன்னனுக்கு செய்து கொடுத்தவன்.

ரோமாபுரியை ஆண்ட தளகர்த்தர்கள் கப்பல்களை கொண்டு வந்து நிறுத்துவார்கள். அந்த பாய்மரக் கப்பல்களையெல்லாம் தொலைவிலே இருந்தவாறு தீயிட்டு கொளுத்துவதற்கான தந்திரங்களை ஆர்க்கி மிடீஸ் தன்னுடைய மன்னனுக்கு கற்றுக் கொடுத்தான்.

அங்கிருந்து பூதக் கண்ணாடிகளை வைத்து சூரிய வெளிச்சத்திலே அந்தப் பூதக்கண்ணாடியிலே அந்த வெப்பம் விழச் செய்து அந்த வெப்பத்தை பாய்மரக் கப்பலிலே கட்டப்பட்டிருக்கின்ற பாய்களின் மீது ஓட விட்டு அந்தப் பாய்களை எரியச் செய்து மூன்று ஆண்டு காலம் ரோமானிய தளகர்த்தன் மார்செல்லஸ் என்பவன் உள்ளே நுழையமுடியாதபடி கடலிலே தங்கியிருந்தான். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவன் சிராகஸ் நாட்டை வென்றான். வென்று உள்ளே நுழைந்தான்.

வென்று வந்த தளபதிக்கு ஒரு ஆசை. ஆர்க்கிமிடீஸ் என்ற அந்தக் கணித மேதை தன்னுடைய ஒப்பற்ற அறிவினால் அல்லவா மூன்று ஆண்டு காலம் இந்த நாட்டிற்குள்ளே நுழைய முடியாமல் கடலிலே நம்மை தடுத்து வைத்திருந்தான்; எனவே அவனைப் பார்க்க வேண்டும் என்று வீரன் ஒருவனை அழைத்து உடனடியாக ஆர்க்கிமிடீஸை என்னிடத்திலே அழைத்துவா என்றான். வீரன் சென்றான்.

அவன் சென்ற பொழுது ஆர்க்கிமிடீஸ் ஒரு கணி தத்திலே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். "ஐயா இந்த நாட்டை வென்ற மார்செல்லஸ் உங்களை அழைக்கிறார்!" என்று வீரன் சொன்னான்.

அதைக் கவனிக்காமல் கணிதத்திலே அவன் தன்னு டைய ஆழ்ந்த சிந்தனையை செலுத்திக் கொண்டிருந்தான்.

இரண்டுமுறை கூப்பிட்டான். மூன்றுமுறை கூப்பிட்டான் நான்காவது முறை ஆர்க்கிமிடீஸ் சொன்னான், "வேலை யாக இருப்பது உனக்கு தெரியவில்லை. யார் அழைத்தாலும் வரமுடியாது" என்று சொல்லிவிட்டு வேலையை தொடங்கினான்.

உடனே வீரனுக்கு கோபம் வந்துவிட்டது. தன்னுடைய மன்னன் அழைத்து வரவில்லையென்ற காரணத்தால் கையிலே இருந்தகட்டாரியால் அவனுடைய நெஞ்சத்திலே குத்தி ஆர்க்கிமிடீஸைக் கொன்று விட்டு அரண்மனைக்கு வந்து தன்னுடைய தலைவனைப் பார்த்து "நான் சென்று அழைத்தேன். அவன் செருக்கோடு பதில் சொன்னான். அவனை சாகடித்துவிட்டு வந்தேன்!" என்று சொன்னவுடன் வென்றவன் வீரன் ஆனாலுங்கூட, அந்த நாட்டை வெல்ல வேண்டுமென்று மூன்று ஆண்டு காலம் காத்துக் கொண்டிருந்தான் என்றாலுங்கூட, ஆர்க்கிமிடீஸின் ஆற்றலால் அறிவால் நாட்டிற்குள் நுழைய முடியாது தடுக்கப்பட்டாலுங்கூட, "அந்த ஆர்க்கிமிடீஸ் என்ற அறிவாளியை கொன்று விட்டாயே; நான் உன்னை அனுப்பியது தவறுகப் போய்விட்டது. என்ன இருந்தாலும் நீ ஒரு சாதாரண சிப்பாய்தானே உனவே இந்தக் காரியம் செய்து விட்டாய்!" என்று வருந்தி, கலங்கி, மனம் வெதும்பி அவனுக்கு இறுதியாத்திரையைப் மிகச் சிறப்பாக செய்துவிட்டு இன்றைக்கும் யாரும் பார்த்து பாராட்டுகின்ற அளவிற்கு ஒரு கல்லறை எழுப்பினான் என்று வரலாறு கூறுகிறது.

அந்த வரலாற்றில் மார்செல்லஸ் வாழ்க்கையிலே ஒரு கரும்புள்ளி விழுந்தாலும் கூட ஆர்க்கிமிடீஸ் வாழ்க்கையில் ஒரு செம்புள்ளி விழுந்தாலும்கூட அந்த இரண்டு புள்ளிகளும் உலக வரலாற்றில் என்றென்றும் மறக்க முடியாத புள்ளிகளாக அமைந்திருக்கின்றன.

அதைப்போலத்தான் இன்னொரு விஞ்ஞானி. அவன் செய்த குற்றம் என்ன தெரியுமா? அவன் வீரமாக சில

செய்திகளை வெளியிட்டான். பிறகு 'கோலைத்தனமாகத் தான் செய்தது தவறு' என்றுகூட ஒப்புக்கொண்டான். கலீலியோ அவன் பெயர்.

"சூரியன் அப்படியே இருக்கிறது. அதைப்பூமிதான் சுற்றி வருகிறது" என்று அவன் சொன்னான்.

மத குருமார்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "இல்லை; இல்லை! பூமி அப்படியே இருக்கிறது. சூரியன் தான் கிழக்கே இருந்து மேற்கே வருகிறது. பிறகு மேற்கேயிருந்து கிழக்கே வருகிறது கலீலியோ சொல்வது தவறு!" என்றார்கள்.

"இல்லை நான் சொல்வது தான் சரி "என்றான் கலீலியோ"

பிறகு கலீலியோவை அழைத்துச் சென்று மதக் குருமார்கள் குற்றவாளி கூண்டிலே நிறுத்தி விசாரித்து மிரட்டினார்கள்.

"நீ நாங்கள் சொல்வதை ஒத்துக்கொள்ள வேண்டும்; சூரியனை பூமி சுற்றுவதாக நீ சொல்லுகிறாய்; அது தவறு; பூமி அப்படியே இருக்கிறது. பூமி சூரியனைச் சுற்றவில்லை. நீ ஒத்துக் கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால் மரண தண்டனை!" என்றார்கள்.

"என்ன செய்ய வேண்டும்?" என்றான் கலீலியோ.

"நாங்கள் சொல்வதை அப்படியே ஒத்துக்கொண்டு கையெழுத்துப் போட வேண்டும்" என்றார்கள்.

உடனே கலீலியோ அந்த ஒப்பந்தத்தை வாங்கிப் படித்து பார்த்துவிட்டு "ஆமாம்! சூரியனை பூமி சுற்றவில்லை!" என்று எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

அவனுடைய மாணவர்கள் பார்த்தார்கள். "உங்களை ஒரு பெரிய வீரர் என்று கருதினோம்; கொடுமைகளுக்கு எதிராகப் போராடாமல் துணிவோடு இருக்காமல் இப்படி

பூமி சூரியனைச் சுற்றவில்லை என்று ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறீர்களே ; வெட்கமாக இல்லையா ?'' என்று கேட்டார்கள்.

கலீலியோ சொன்னான், ''மாணவர்களே ! நான் இன்னும் நீண்ட நாள் இருந்து பல ஆராய்ச்சிகளை செய்ய வேண்டுமென்று கருதியிருக்கிறேன். அதற்குள்ளே சாக விரும்பவில்லை ; நான் ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்டுவிட்ட காரணத்தாலே இனிமேல் பூமி சூரியனைச் சுற்றாமல் இருந்துவிடாது. அது சுற்றிக் கொண்டுதான் இருக்கும்'' என்று அவன் பதில் கூறினான்.

அரிஸ்டாட்டில் என்ற பெரிய மேதையின் கருத்தை எதிர்த்து அவன் விவாதம் புரிந்திருக்கின்றான்.

கனமான ஒரே வடிவுள்ள இரு பொருள்கள். கனமானது ஒன்று, லேசானது ஒன்று. இவைகளை குறிப்பிட்ட உயரத்திலே இருந்து கீழே போட்டால் கனமான பொருள் விரைவில் பூமியை அடையும். லேசான பொருள் சற்று தாமதமாக பூமியை அடையும் என்பது அரிஸ்டாட்டிலுடைய கருத்து !

இதைக் கலீலியோ மறுத்தான். இல்லை இரண்டும் ஒரே காலகட்டத்தில்தான் விழும் என்று சொன்னான்.

அதை ஆராய்ச்சி செய்ய, கடைசியாக பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்தின் மீது ஏறி இரண்டு இரும்புக் குண்டுகளைக் கீழே போட்டார்கள்.

இரண்டும் ஒரே வடிவம்; ஆனால் எடை வெவ்வேறு.

அப்போது இரண்டும் ஒரே நேரத்தில் தான் விழுந்தன என்று காட்டி அரிஸ்டாட்டிலை கலீலியோ வெற்றி கொண்டார் என்பது வரலாறு.

இது அரிஸ்டாட்டிலின் வரலாற்றிலே ஒரு தோல்விப் புள்ளி. ஆனால் கலீலியோ வரலாற்றிலே அவருக்கு ஒரு வெற்றிப் புள்ளி.

அதைப் போல நீங்கள் பலரும் அறிந்த பெயர் தான் ஐசக் நியூட்டன். அந்த ஐசக் நியூட்டனைப் பற்றி ஓர் எடுத்துக்காட்டிற்கு, நம்முடைய மொழிப் பிரச்சனையிலே கூட நமது அண்ணு அவர்கள் பல முறை அவன் பெயரை பயன்படுத்தியிருக்கின்ருர். அவன் பூனை வளர்த்தான். அவனுடைய அறைக்குள்ளே அவன் வளர்த்த பூனை வருவதற்கும் போவதற்கும் ஒரு துளையை செய்து வைத்தான்; அதன் வழியாக பூனை வரும்; போகும்.

பிறகு பூனை குட்டி போட்டது. தச்சனைக் கூப்பிட்டு "அப்பா பூனை குட்டிபோட்டு விட்டது. பூனை வருவதற்கு ஏற்கனவே வழி இருக்கிறது. பூனைக்குட்டி வருவதற்கு இன்னெரு சிறிய வழி செய்" என்ருன்.

தச்சனே "என்னய்யா; இவ்வளவு பெரிய விஞ்ஞானியாக இருக்கிறீர். பூனை வருகிற வழியிலே குட்டியும் வராதா" என்று கேட்டான்.

"ஓகோ! அப்படியா!" என்ருன் ஐசக் நியூட்டன்.

நமக்கு தாய்மொழி தமிழாக இருந்தாலுங்கூட நமக்கு தொடர்பு மொழியாக இந்தி இருக்கவேண்டுமென்று சொல்லுபவர்களைப் பார்த்து அண்ணு சொல்லுவார் "ஆங்கிலம்; இந்தியாவிற்கு மட்டுமல்ல; உலகத்திற்கே தொடர்பு மொழியாக இருக்கும்பொழுது தமிழை தாய் மொழியாக கொண்டிருக்கிற தமிழன்-ஆங்கிலமொழியை தொடர்பு மொழியாக கொண்டிருக்கிற தமிழன்-மற்ற மாநிலங்களோடு தொடர்பு கொள்ளவும் உலக நாடுகளோடு தொடர்பு கொள்ளவும்-

ஆங்கிலம் இருக்கும் பொழுது இடையிலே இந்தி ஏன்? என்று நியூட்டனிடம் கேட்டதைப் போல பெரிய பூனை செல்வதற்கு ஒரு வழி இருக்கும் போது சின்ன பூனை செல்வதற்கு ஒரு வழி தேவையா? தேவையில்லை.

ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும் பொழுது இந்தி தேவையில்லை!'' என்று அன்றைக்கு அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அப்படி பூனை போவதற்கும் குட்டி போவதற்கும் தனித்தனி வழி வேண்டுமென்று சொன்ன அந்த நியூட்டன் தான் இன்றைக்கு சந்திர மண்டலம் சென்று அங்கிருக் கின்ற கற்களை எடுத்து வந்து காட்டுகின்ற அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருப்பதற்கான விதையை ஊன்றிய வன்.

ஒரு ஆப்பிள் மரத்தினடியில் படுத்திருக்கும் பொழுது கீழே தொப்பென்று விழுந்த ஆப்பிள் பழத்தை கையிலே எடுத்து வைத்துக் கொண்டு, ''மரத்திலே இருந்த பழம் விழுகின்ற பொழுது ஏன் கீழே பூமியிலே விழவேண்டும் ஏன் ஆகாயத்தை நோக்கிப் போகக் கூடாது?'' என்று கேட்டான்.

அந்தக் கேள்வியைக் கேட்ட பலபேர் பைத்தியக்காரன் என்றார்கள். அதற்குப் பிறகுதான் உலகமே உணருகின்ற அளவிற்கு பூமிக்கு ஒரு குறிப்பிட்ட தூரம்வரை ஆகர்ஷண சக்தி இருக்கிறது. அதுவரையிலே எந்தப் பொருள் இருந் தாலும் இழுத்துக்கொள்ளும். அந்த சக்தியைத் தாண்டி அந்தப் பொருள் மேலே போய் விட்டால் இன்னொரு கிரகம் அந்தப் பொருளை இழுத்துக் கொள்கின்ற சக்தி வாய்ந்ததாக இருக்கிறது! என்ற இந்த அருமையான அடிப்படைத் தத்துவத்தை, நியூட்டன் மரத்திலிருந்து கீழே விழுந்த ஆப்பிளைப் பார்த்து அதிலிருந்து கண்டு பிடித்து உலகிற்கு வழங்கினான்.

அப்படிப்பட்ட விஞ்ஞான மேதைகளெல்லாம் நம்முடைய உலகத்தில் சரித்திர நாயகர்களாக இன் றைக்கும் மறக்க முடியாத பெரும்புள்ளிகளாக இருக் கிறார்கள்.

ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்த டார்வின் தான் ஒரு பெரும் தத்துவத்தை—உலகத்திலே உயிரினங்களின் உற்பத்தி எப்படி என்ற வரலாற்றையே நூலாக வகுத்துத் தந்தான்.

அந்த நூலுக்கு அந்தக் காலத்தில் ஏகப்பட்ட எதிர்ப்பு. இவ்வளவு பகுத்தறிவு உலகமெங்கும் பரவியிருக்கிற இந்தக் காலத்திலே பெரியாருடைய கருத்தை, அண்ணுவினுடைய கருத்தை எடுத்துச் சொன்னுல் எவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனுல் அந்தக் காலத்தில்—பல நூற்ருண்டுகளுக்கு முன்பு—உயிரினங்களின் பரிணும வளர்ச்சிகளையெல்லாம் குறிப்பிட்டு குரங்கிலிருந்து தான் மனிதன் தோன்றினுன் என்ற டார்வின் சித்தாந்தம் வந்தது.

பூச்சியாய், புழுவாய், பல்வேறு வடிவாய் உருவாய் மாறி மாறி சில அவயவங்களைப் புதிதாகப் பெற்று-சில தேவையற்ற அவயவங்களை இழந்து பிறகு குரங்காக மாறி குரங்கிலேயிருந்து மனிதன் வந்தான் என்று டார்வின் சொன்னுன்.

அந்தச் சித்தாந்தத்தை பற்றி விவாதிக்க 'உயிர் இனங்களின் தோற்றம் என்ற டார்வினுடைய புத்தகத்தைப் பற்றி விவாதிக்க ஒரு கடுமையான மோதல் 1860-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஏற்பாடாயிற்று.

அந்த விவாதத்திலே கலந்து கொள்ள டார்வின் சித்தாந்தங்களுக்கு எதிரியான பிஷப் வில்பர்போரிஸ் என்ற ஒருவர் வந்தார்.

டார்வினை ஆதரித்துப் பேச ஹக்ஸ்லி என்பவர் வந்தார்.

விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது டார்வினை ஆதரித்து பேசுகின்ற ஹக்ஸ்லினைப் பார்த்து

பிஷப் வில்பர் போரிஸ் கேட்டார் ''ஹக்ஸ்லி அவர்களே! டார்வின் சித்தாந்தத்தை ஆதரித்துப் பேச வந்திருக்கிறீர் களே! அப்படியானுல் உங்களுடைய தாத்தா பாட்டி யெல்லாம் குரங்குகள் தானு'' என்று கேட்டார்.

ஹக்ஸ்லினே அமைதியாகப் பதில் சொன்னர்.

எப்பொழுதும் எரிச்சல்காரர்களுக்கு வார்த்தை வேக மாக வரும். அமைதியாக பண்பாட்டோடு பழகுகின்றவர் களுக்கு அதே வேகத்திலே வார்த்தைகள் வராது. அமைதி யாகத் தான் பதில் வரும்.

டார்வின் எதிர்ப்பாளனே பார்த்து டார்வின் ஆதர வாளரான ஹக்ஸ்லி-பரிணும வளர்ச்சி என்ன என்று விளக்கி விட்டு ''என்னுடைய மூதாதையர்கள் குரங்காக இருந்தார்கள் என்று நீங்கள் கேலி பேசியதற்காக நான் அவமானப்படுவதை விட இன்றைக்கு அறிவு, ஆற்றல் இவைகளையெல்லாம் பொய்யுரைப்பதற்காகவே பயன் படுத்துகின்ற மனித இனத்தில் ஒருவனுக ஆகி இருக் கிறேனே என்பதற்காகத்தான் நான் வெட்கப்படுகி றேன்'' என்று சொன்னர்.

இப்படி விஞ்ஞான மேதைகள் தங்களுடைய வாதங் களால்—கருத்துக்களால் இந்த உலகத்திலே இது எப்படித் தோன்றியது; எப்படி இயங்குகிறது எத்தகைய மாற்ற மெல்லாம் பெற்றிருக்கின்றது என்று நமக்கு அறிவுறுத்தி இன்றைய தினம் ஒரு உயரிய நாகரீகக் கட்டத்திலே நம்மை யெல்லாம் நிறுத்துகின்ற அளவிற்கு பாடுபட்டிருக் கின்றர்கள்.

விஞ்ஞானத்தில் நாம் டெலிபோனை பயன்படுத்து கின்ற நேரத்திலே நமக்கு கிரகாம் பெல் ஞாபகம் வருவ தில்லை. நமக்கு வருவதெல்லாம் ''இது என்ன கிராஸ் டாக் வருகிறது?'' என்பதுதான். இன்றைக்கு டெலி போன் அப்படியல்லவா இருக்கிறது; டெலிபோன்

இன்றைக்கு ஒழுங்காக இயங்குவதில்லை, என்பது வேறு விவகாரம்.

ஆனல் அந்த டெலிபோனை மிகச்சாதாரணமாக ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு ஒரு அறையிலே அமர்ந்து கிரகாம்பெல்லும், இன்னெரு அறையிலே அவனுடைய நண்பன் வாட்சனும் அமர்ந்து ஒரு கம்பி வழியாக பேசி இந்தப் பேச்சு அவனுடைய காதிலே விழுந்து இதைப்போல நீண்ட தூரத்திற்கும் பேச லாம் என்கின்ற அளவிற்கு தொலைபேசி சாதனங்கள் இன்று வளர்ந்திருக்கிறதென்றாலும், நமக்கு கிரகாம் பெல்லைத் தெரியாது.

ஒரு முறை அண்ணு சொன்னர். நம்முடைய நாட்டு மக்களைப் பார்த்து வானெலியை கண்டு பிடித்தது யார் என்று கேட்டால் தெரியாது என்பார்கள். ஆனல் எமன் ஏறும் வாகனம் எது என்று கேட்டால் உடனே எருமைக்கடா என்று சொல்லுவார்கள். அந்த அளவிற்கு நம்முடைய நாட்டு மக்கள் அறிவு உலகத்தில் கவனம் செலுத்துகிறார்கள் என்று ஆதங்கத்தோடு ஒரு எழுத் தாளர் மாநாட்டில் பேசும்போது-அண்ணு அவர்கள் சொன்னர்கள். அதுபோல கிரகாம்பெல்லையோ வாட் சனையோ அல்லது மின்சார விளக்குகளைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசனையோ மறந்திருக்கின்ற இந்த உலகத்தில்—அந்த—நாட்டில்—மாணவர்களாகிய நீங்கள் அந்தக் கருத்துக்களை உங்களது உள்ளத்திலே பதிய வைக்க வேண்டும்.

ஒரு மின் விளக்கு எரிகிறதென்றால் ஏதோ அங்கிருக் கின்ற ஊராட்சி மன்றத்தார் போட்டது; நகராட்சி மன்றத்தார் போட்டது என்று மாத்திரம் எண்ணினால் போதாது.

அந்த மின்விளக்கு எரிவதற்கு என்னென்ன உப கரணங்கள் தேவை—அந்த மின்விளக்கை கண்டு பிடிக்க

யார் யார் பாடுபட்டார்கள் எவ்வளவு முயற்சிகள் மேற் கொளளப்பட்டன? என்கின்ற இவைகளையெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

புராணங்களை தெரிந்து வைத்துக் கொள்கின்ற அளவிற்கு சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் இவைகளை தெரிந்து வைத்துக் கொள்கின்ற அளவிற்கு இப்படிப்பட்ட விஞ்ஞான புதுமைகள் எல்லாம் எப்படித் தோன்றின என்பதை நாம் தெரிந்து வைத்துக் கொள்ளவில்லை.

1879-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ம் நாள் தாமஸ் ஆல்வா எடிசன் முதன்முதலாக ஒரு பல்பை 48 மணி நேரம் தொடர்ந்து எரிய வைத்தார்.

இன்றைக்கு விதவிதமான பல்புகளெல்லாம், மின் விளக்குகளெல்லாம் அலங்காரங்களெல்லாம் செய்யப் படுகின்றன.

ஆனால் 1879-ல் ஒரு மின்விளக்கு 48 மணி நேரம் தொடர்ந்து எரிந்தது என்பது உலகத்திலே வியப்புக் குரிய செய்தியாக இருந்தது.

அந்த அற்புதத்தை விளைவித்தவர்களை எல்லாம் இன்றைக்கு நாம் மறந்து விடுகின்றோம், இவர்கள் விஞ்ஞானத்திலே புதுமை செய்தார்கள். அதைப்போல வரலாற்றிலே புதுமை செய்தவர்களையும் மறந்து விட்டோம்.

அலெக்சாண்டர் பெயரைக் கேள்விப்பட்டிருக்கின் றோம். அவன் விளைத்த வீரசாகசங்களை மறந்திருக் கின்றோம்.

ஜூலியஸ் சீசர் பெயரைக் கேள்விப் பட்டிருக் கின்றோம். அந்த ஜூலியஸ் சீசரின் முடிவு எப்படி ஏற் பட்டது? "YOU TOO BRUTUS" (நீயுமா புரூடஸ்?) என்று கேட்கிற அளவிற்கு துரோகம் அங்கே முதுகில் குத்தியது.

ஜூலியஸ் சீசரைப்பற்றிப் படிக்கிறோம், ஆனால் ஜூலியஸ் சீசரை முதுகிலே குத்திய துரோகத்தை மறந்து விடுகிறோம்.

அது இன்றைக்கும் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரியமாக இருக்கின்றது. அதையும் நாம் மறந்து விடுகின்றோம்!

"முடியாது" என்ற வார்த்தை அகராதியிலே கிடையாது என்று சொன்னான் நெப்போலியன். அவன் வரலாற்றிலே பெரும் புள்ளி. அவன் தோற்று இருக்கலாம். பிரிட்டிஷ் படைகளினால் அவன் படை தோற்கடிக்கப் பட்டிருக்கலாம்.

அவன் எல்பா தீவிலும், ஹெல்னு தீவிலும் சிறைப் பட்டிருக்கலாம். சிறைப்பட்டிருக்கின்ற நிலையிலே அவன் இறந்து கூட போயிருக்கலாம். ஆனால் அவனை வென்றவர்கள் யார் என்று கேட்டால் நமக்கு உடனே ஞாபகம் வராது.

தோற்றுப் போய் நிற்பவர்களுடைய ஞாபகம் வருகிறதென்றால் அந்த அளவிற்கு அவர்கள் களத்தில் வீரம் விளைவித்தார்கள் என்பதுதான் காரணம். அப்படிப் பட்ட வீரர்களை மறந்து விட்டோம். நம்முடைய இந்தியாவிலே அசோகன், ஹர்ஷன், சந்திரகுப்தன், அக்பர் என்றெல்லாம் கூட பெயர்களைப்பற்றி படிக்கிற காலத்திலும் தமிழ் நாட்டிலே இப்படிப்பட்ட மன்னர்கள் வீரவேந்தர்கள் இருந்தார்கள் என்பதை யாராவது சொல்லும்போதும் தான் வியப்போடு கவனிக்கின்றோம்.

அசோகனுக்கு ஈடாக, அக்பருக்கு ஈடாக இன்னும் சொல்லப்போனால் அவர்கள் எல்லாம்கூட தென்னகத்தில் நுழைய முடியாத அளவிற்கு தடைக்கல்லாக அரணாக சோழ மன்னர்கள் பாண்டிய மன்னர்கள், சேரர்கள் தென்னகத்திலே வாழ்ந்தார்கள் என்ற அந்த விபரம்

களையெல்லாம் நினைவூட்டினுல் தான் 'ஓ அப்படியா' என்று எண்ணிப்பார்க்கிறோம்.

சேரன் செங்குட்டுவன் இமயம் வரையிலே சென்றான். கண்ணகிக்கு சிலை எடுக்கக் கல் எடுத்து வந்தான். கடாரம் கொண்டான் இராஜேந்திர சோழன். சிங்களத்திலே இருந்து கைதிகளைக் கொண்டு வந்தான் இராஜராஜ சோழன் இவைகளெல்லாம் வரலாறுகள். அந்த வரலாறுகளையெல்லாம் மறந்து விட்டோம் பெரும் புள்ளிகளும் வரலாற்றிலே உண்டு. அதைப்போல ஹிட்லர், முசோலினி இப்படிப்பட்ட கறும்புள்ளிகளான, சர்வாதிகாரப்புள்ளிகளும் வரலாற்றிலே உண்டு.

அதிலும் முசோலினி தன்னை ஒரு சர்வாதிகாரியாக ஆக்கிக் கொண்டது மாத்திரம் அல்ல; அவனுடைய வாழ்க்கை லட்சணங்களைப்பார்த்தால் கூட அவன் மிகவும் தந்திரசாலியாகவும் இருந்திருக்கிறுன். முசோலினி இத்தாலிய நாட்டினுடைய பெரும் புள்ளியல்லவா; எப்படி தந்திரசாலியாக இருந்தான் என்றுல் அவனுக்கு தலை வழுக்கையாம். அந்த வழுக்கைத் தலை இருப்பது யாருக்கும் தெரியக்கூடாதென்பதற்காக அறவே மொட்டையடித்து விட்டானும்.

அறவே மொட்டையடித்துக்கொண்ட காரணத்தால் முசோலினி மொட்டையடித்துக் கொண்டு விட்டான் என்று ஊர் பேசியதே தவிர வழுக்கைத் தலை என்று சொல்லவில்லை. அவனுடைய ஐம்பதாவது ஆண்டு விழா வந்ததாம். ஐம்பதாவது வயது என்று யாருக்கும் சொல்லக் கூடாது என்று ஆணையிட்டு விட்டானும். காரணம் வயது தெரிந்து விடும் என்பதற்காக.

அப்படி முசோலினி ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தினுன். தன்னைப் பற்றிய எண்ணம் மக்களிடம், தாழ்வாக வந்து விடக்கூடாது; என்றும் தான் இளைஞனே என்கின்ற எண்ணம் இருக்க வேண்டும் என்று

அந்தப் பெரும்புள்ளி அன்றைக்கு நினைத்தது. ஆனால் அந்தப்புள்ளிகளுடைய முடிவெல்லாம் உங்களுக்குத் தெரியாததல்ல.

இந்த உலகில் பகுத்தறிவுக் கருத்துக்களை போதித் தவர்கள், மூடநம்பிக்கைகளிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்பதற்காக கொள்கை போதித்தவர்கள் பலர்.

புத்தர் இங்கே தான் பிறந்தார்.

இந்தியாவிலே தான் வாழ்ந்தார், இந்தியாவிலே தான் அந்தப் புனிதமான கொள்கைகளை பரப்பினர். ஆனால் இந்தியாவிலே அவருக்கு சிறந்த இடமில்லை. அவருடைய மதம் இங்கே பரவவில்லை.

அது சீனத்திலும், இலங்கையிலும் வேறு பல நாடு களிலும் பரவியிருக்கிறது. இங்கே பரவ இயலாமல் தடுக் கப்பட்டு விட்டது. அந்தக் கொள்கைகளுக்கு இங்கே இடமில்லாமல் போய்விட்டது.

சாக்ரட்டீஸ் தன்னுடைய கொள்கைகளை சொன் னதற்காக நச்சுக்கோப்பை தந்தபோதுகூட அந்த விஷத்தை வாங்கி அருந்துவதற்கு தயாராக இருந்தானே அல்லாமல், தன்னுடைய கொள்கையை விடுவதற்கு அவன் கிஞ்சிற்றும் தயாராக இல்லை.

அப்படிப்பட்ட கொள்கை உறுதி வாய்ந்தவர்களாக கிரேக்கத்திலே வயதான கிழவர்களும் இருந்தார்கள் என் கிற பொழுது, தமிழகத்திலுள்ள இளைஞர்கள் கொள் கையை காப்பாற்ற உறுதி படைத்தவர்களாக நிலை குலையாத நெஞ்சம் படைத்தவர்களாக இருந்திட வேண்டாமா?

இன்றைக்கு உலகம் முழுவதும் போற்றப்படுகின்ற புனித மார்க்கம்; தொழிலாளர்களுக்கென்று பாட்டாளி வர்க்கத்திற்கென்று எழுதப்பட்ட கார்ல் மார்க்ஸின் தத்துவம்!

ஆனல் அவனுடைய வாழ்க்கை எப்படி இருந்தது? ஒரு சீமாட்டியைத்தான் மணந்திருந்தான். ஆனல் அந்த சீமாட்டி கார்ல்மார்க்ஸினுடைய வறுமையோடு சேர்ந்து வாடினுள்; வதங்கினுள்.

அவனுடைய வாழ்க்கை குறிப்பைப் பார்த்தால் கார்ல்மார்க்ஸ் வேறுநாடுகளிலிருந்து துரத்தப்பட்டு கடைசியாக இங்கிலாந்தில் வாழ்க்கை நடத்துகிற நேரத் திலே மூன்று பிள்ளைகளை ஒரே ஆண்டில் அவர்கள் இழக்கிருர்கள்.

அதிலும் ஒரு பெண் குழந்தை சாவதைப்பற்றி எண்ணி கார்ல் மார்க்ஸினுடைய மனைவியே எழுது கிருள். ''என்னுடைய பெண் குழந்தை வலிப்பு நோயால் கஷ்டப்பட்டது. அந்தப் பெண் குழந்தைக்கு பசியார பால்கொடுத்தால் கூட அது எனக்கும் துன்பம் அதற்கும் துன்பம். பால் குடிக்கும் பொழுது வலிப்பு நோய் குழந் தைக்கு வந்து விடும். அப்படி வந்து விடும் பொழுது பல்லால் எனது மார்பகத்திலே கடித்து விடும்; ஆனு லும் பால் அருந்த தயங்காது, அப்படிப் பால் அருந்தும் பொழுது என்னுடைய பாலும் இரத்தமும் அந்த குழந் தைக்கும் போகும்.

இப்படி அந்தக் குழந்தை நோயால் கஷ்டப்பட்ட பொழுது கடன்காரர்கள் வந்து தொல்லை கொடுத்தார் கள்; வீட்டிலிருந்த பொருள்களையெல்லாம் வீதியிலே தெருவிலே எறிந்து விட்டார்கள். கார்ல்மார்க்சும் நானும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தோம். அந்த நேரம் அந்தப் பெண் குழந்தை இறந்து விட்டது. இறந்த குழந்தையை எடுத்துச் செல்வதற்கு வழியில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் அந்தக் குழந் தையை தாழ்வாரத்திலே ஒரு துணியை போட்டு மூடி வைத்துவிட்டு வெளியிலே வந்து நாங்கள் அழுது புலம்பிக் கொண்டிருந்தோம். எனது நண்பர் ஒருவர் வந்தார்.

அவரிடத்திலே சொல்லி ஒரு சவப்பெட்டி தயாரிக்கச் சொன்னேம்.

அவர் ஒரு சவப்பெட்டியை எங்கள் இடத்திலே நன் கொடையாகக் கொண்டு வந்து கொடுத்தார். என் குழந்தைக்கு தூங்கவைக்க ஒரு தொட்டில் இல்லாவிட்டா லும் அதைப் புதைப்பதற்கு ஒரு சவப்பெட்டியாவது கிடைத்ததே என்ற ஆறுதலோடு அந்தக் குழந்தையை சவப்பெட்டியில் அடக்கம் செய்தோம்'' என்று கார்ல் மார்க்ஸினுடைய மனைவி ஜென்னிமார்க்ஸ் அன்றைக்கு தன்னுடைய வாழ்க்கை அவலத்தை எழுதுகிறார் என் றால், எப்படியெல்லாம் இந்த உலகைத் திருத்திய உத்தமர் கள் இன்னல்களை ஏற்றுக்கொண்டு தியாகச் சுடர்களாக விளங்கியுள்ளார்கள் என்பது புரிகிறதல்லவா?

எனவேதான் நான் குறிப்பிட்ட இந்தப் பெரியவர்கள், உத்தமர்கள், விஞ்ஞானிகள், தீரர்கள் இவர்களெல்லாம் வரலாற்றிலே என்றென்றும் அழிக்கமுடியாத புள்ளிகள்.

இந்த அழிக்கமுடியாத புள்ளிகளை — யாரும் அழித்திட இயலாத புள்ளிகளை—நாம் பின்பற்றி அந்தப் புள்ளிகள் வரிசையிலே வரலாற்றில் நம்முடைய பெயர் இணைய வேண்டும் என்கின்ற அந்த ஆசையோடு மாணவச் செல்வங்கள் பணியாற்றிட வேண்டுமென்று இந்த முத்தமிழ் பேரவை விழாவிலே கேட்டுக்கொண்டு என் உரைக்கு முற்றுப்புள்ளி வைத்து அமைகிறேன், வணக்கம்!

—இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினர்கள்.

★

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

தென்றலாக தவழ்ந்து, புயலாக உருவெடுத்து, பூகம்பமாக உறுமி, எரிமலைகளாக வெடிக்கும் கவிதை களைப் பாடிய பாவேந்தர் பாரதிதாசனுக்கு நிகர் பாரதி தாசனே என்று சென்னை ரிசர்வ் வங்கி தமிழ்மன்றம் நடத்திய பாரதிதாசன் பிறந்தநாள் விழாவில் 1986 ஏப்ரல் 18ல் தலைவர் கலைஞர் ஆற்றிய உரை வருமாறு—

ரிசர்வ் வங்கி தமிழ்மன்றத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ரிசர்வ் வங்கி தமிழ் மன்றத்தின் சார்பாக இன்று இரண்டு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஒன்று: தமிழ்ப் புத்தாண்டு. மற்றொன்று, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள்!

இந்த இரு விழாக்களையும் கொண்டாடுகிற நேரத்தில் 'தமிழ்' என்கின்ற உணர்வும், 'தமிழன்' என்கின்ற உணர்வும், 'தமிழினம் உரிமை பெற வேண்டும் — தன்மானம் பெறவேண்டும்' என்கின்ற உணர்வும் நமக்கெல்லாம் ஏற்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு ரிசர்வ் வங்கியின் தமிழ் மன்றத்தைச் சார்ந்த நண்பர்கள் இந்த நிகழ்ச்சியை உருவாக்கியிருக் கிறார்கள்.

நான் முதலிலே அழைக்கப்பட்டபோது, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்தநாள் விழா என்று மட்டுமே எண்ணியிருந்தேன். அழைப்பிதழை பொதுவாக நான் மேடைக்கு வந்த பிறகுதான் பார்ப்பது வழக்கம். நண்பர்கள் அழைப்பார்கள்; தேதியை நான் ஒப்புக் கொண்டு நாட்குறிப்பிலே அதை குறித்துக்கொள்வேன். பிறகு அது திருமணமானாலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சி களானாலும் அந்த நிகழ்ச்சியிலே யார்யார் கலந்து

கொள்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் மேடையிலே வந்து அமர்ந்த பிறகு அழைப்பிதழைப் பார்த்துத் தான் தெரிந்து கொண்டு நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வது வழக்கம்.

காரணம் முதலிலே அழைப்பிதழைப் பார்த்திருந்தால் கூட மறந்து விடுகிற அளவுக்கு அவ்வளவு பணிகள் என்னை சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

இன்று காலையில் மேலவையிலே வீட்டு வசதி வாரியத்தின் கொள்கைக் குறிப்பின் அடிப்படையில் சில கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டிய கடமைக்கு நான் ஆட்பட்டிருந்தேன். அதற்குப் பிறகு நான் மிக விருப்பத் தோடு பார்க்கின்ற கிரிக்கெட் விளையாட்டை பிற்பகலில் தூங்காமல் கூட பார்த்துவிட்டு முடிவு தெரியாமல் இங்கு வந்திருக்கின்றேன்.

இன்று நடைபெறுகின்ற போட்டி — இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெறுகின்ற போட்டி. இதில் இந்தியா வெற்றி பெற வேண்டும் என்று எண்ணுவது நம்முடைய இயல்பு. எனவே இந்தியா கிரிக்கெட்டிலே கூட வெற்றி பெற வேண்டும் என்று கருதுகிற காரணத்தால் இந்தியா எல்லாவற்றிலும் வெற்றி பெற வேண்டும் என்கின்ற மனப்பாங்கு நமக்கு இருக்கிறது என்பதும்; மொழியால் தமிழர்; இனத்தால் திராவிடர்; என்றுலுங்கூட நாட்டால் இந்தியர்கள் என்பதை ஒத்துக் கொண்டவர்கள்; உலகத்தால் மனிதர்கள்; எனவே தான் அன்றைக்கே சங்க காலத்துப் புலவர்,

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்று பாடினர்.

அதைக்கூட பல பேர் ''யாவரும் கேளிர்'' என்பதை ''எல்லோரும் கேளுங்கள்'' என்று புலவர் சொல்லியிருக்கிறார்கள் என எண்ணிக் கொண்டிருந்தார்கள். 'கேளீர்' அல்ல! கேளிர் என்றால் உறவினர்.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்றுல் எல்லா ஊரும் நம்முடைய ஊர்கள் தான்; எல்லோரும் நமக்கு உறவினர்கள் தான் என்று பாடினுர். அந்தப் பாடலே எளிமையாக்கி அண்மையிலே ''குங்குமம்'' இதழில் சங்கத்தமிழ் எழுதியிருக்கிறேன், உங்களில் சிலராவது படித்திருக்கக்கூடும்.

''சங்கத் தமிழில்'' நான் இறுதியாக குறிப்பிட்டிருக் கின்றேன், ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்று பாடிய அந்தப் புலவர் முகவை மாவட்டத்தில் மகிபாலன் பட்டி என்று இன்றைக்கு அழைக்கப்படுகின்ற பூங்குன்றம் என்று அந்த காலத்தில் அழைக்கப்பட்ட ஊரிலே பிறந்தவர். அவர் தனது பெயரை கணியன் பூங்குன்றனுர் என்று வைத்துக் கொண்டார்.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்று பாடிய புலவர் கணியன் பூங்குன்றன் என்று தன்னுடைய பெயரை வைத்துக் கொண்டதிலேயிருந்து ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்று உலகத்தைப் பற்றி சிந்தித் தாலும் கூட தன்னுடைய சொந்த ஊரை மறந்துவிடாமல் தன்னுடைய ஊர்ப்பெயரையும் இணைத்து கணியன் பூங்குன்றனுர் என்று வைத்துக்கொண்டார்.

உலகம் முழுவதும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்ற பரந்த எண்ணம் இருந்தால் கூட அவரவர்களுக்கு அவரவர் பிறந்த மண்ணின் பற்று; அவர்களே வாழ வைக்கின்ற மொழியின் பற்று; நாட்டின்பற்று அவர்களின் உரிமைகளுக்காக உணர்வை எழுப்புகின்ற இனப்பற்று — இந்த பற்றுக்கள் அனைத்தும் தேவை என்பதை நான் மறந்து விடாமல்தான், இந்தியா கிரிக்கெட்டிலே வெற்றி பெற வேண்டும் என்று கூறினேன்.

நாம் இங்கே இந்த தமிழ் புத்தாண்டு கொண்டாடி னுலும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் எண்ணங்களே எடுத்துச் சொன்னுலும், தமிழ், தமிழன், தமிழினம் என்று பேசினுலும் — இவைகளெல்லாம் குறுகிய

நோக்கம் — மாநிலப்பற்று — பிராந்தியப் பித்து என்றெல்லாம் சிலபேர் பேசி தேசிய நீரோட்டத்தில் கருணாநிதியைப் போன்றவர்களெல்லாம் இன்னும் கலக்க வில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு நான் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்.

என்னைப்பார்த்து ஒருவன் ''நீ யார்?'' என்று கேட்டால், ''நான் தமிழன்'' என்று சொல்லுவேன்.

வெளிநாட்டிலே ஒருவன் என்னைப்பார்த்து நீ யார் என்று கேட்டால் ''நான் நாட்டால் இந்தியன்; தேசிய இனத்தால் மொழியால் தமிழன்'' என்று சொல்லுவேன். மறுபடியும் ''நீ யார்? சரியாகச் சொல்'' என்று கேட்டால், ''நான் நாட்டால் இந்தியன்; மொழியால் தமிழன்'' என்று சொல்லுவேன். இரண்டில் ஒன்றைத்தான் சொல்ல வேண்டுமென்று யார் கேட்டாலும் ''நான் தமிழன்'' என்ற ஒன்றைத்தான் சொல்லுவேன்.

அந்த உணர்வின் அடிப்படையிலேதான் இப்பொழுது பிறந்திருக்கின்ற—ஏப்ரல் 14அன்று பிறந்தசித்திரைத் திருநாளை நான் தமிழ்ப்புத்தாண்டு என்று ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட; பொன் இருந்த இடத்திலே பூவையாவது வைக்கிறார்களே என்கின்ற அந்த உணர்வோடுதான், தமிழ்ப்புத்தாண்டு என்று வழங்கப்படுகிற காரணத்தால் அதை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று தமிழ்ப்புத்தாண்டு என்பதை நான் ஏற்றுக் கொண்டிருக்கின்றேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆனாலும், மறைமலையடிகள் ஆனாலும் மற்றும் பெரும் பாவாணர்கள், புலவர்கள், ஆய்வாளர்கள் தமிழை அறிந்தவர்கள், திராவிட வரலாற்றை ஆராய்ந்தவர்கள், எல்லாம் தை முதல்நாள் தான் தமிழருக்கு புது ஆண்டு பிறக்கிற நாள் என்று சொன்னார்கள். ஆனால் அது தமிழ் நாட்டிலே உள்ள பெரும்பாலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்

படாத ஒரு சூழ்நிலையில், வாடிக்கையாக பல்லாண்டு காலமாக இதுதான் தமிழ் வருடப் பிறப்பு என்று இருந்து நல்ல வேளையாக 'வருஷப் பிறப்பு' என்பது மாறி புத்தாண்டாக உருவெடுத்து தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடப்படுகிற நேரத்தில், அதுவும் தமிழனின் உணர்வை வளர்ப்பதாக இருந்தால் அதையும் ஏற்றுக் கொள்ளலாம் என்கின்ற அளவிலேதான் தமிழ்ப் புத்தாண்டு என்ற சொல்லை நான் ஏற்றுக் கொள் கின்றேன்.

ஏனென்றால் ஆண்டுக்கணக்கு ஒன்று, இரண்டு, பத்து, நூறு, ஆயிரம் என்று சென்றுகொண்டிருந்தால் தான் வரலாற்றுக் காலத்தைக் கணிக்க முடியும். கிறிஸ்து பிறந்ததை வைத்து கி. மு. என்றும், கி. பி. என்றும் வகுத்துக் கொண்டு உலகம் முழுவதும் வரலாற்றைக் கணிக்கின்றோம்.

கரிகால் பெருவளத்தான் கி. மு. 21-ல் பூம்புகாரை தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்றால், கி. மு. 21 என்பது கிறிஸ்து பிறப்பதற்கு 21 ஆண்டுகளுக்கு முன் கரிகாலன் ஆண்டான் என்று சொல்லுகிறோம்.

ஆகவே உலகத்திற்கு பொதுவான ஆண்டுக் கணக்கு அது எந்த மொழிக் கணக்கு-யார் கண்டுபிடித்த கணக்கு என்றெல்லாம் கவலைப்படாமல் கி. மு., கி. பி. என்கின்ற கணக்கை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு 1986—ஆம் ஆண்டு என்று சொல்லுகிறோம்.

என்னுடைய வயதைக் கேட்டால் 62 என்கிறேன். எப்படிச் சொல்வது 62 என்று? இது 86ம் ஆண்டு. நான் பிறந்தது 24ம் ஆண்டு. 86-லிருந்து 24ஐ கழித்து 62 என்று என்னால் சொல்லமுடிகிறது.

ஆனால் தமிழ் வருடங்கள் என்று சொல்லப்படு கின்றனவே — அதை வைத்து என்னுடைய வயதை சொல்ல முடியுமா என்றால் முடியாது.

தமிழ் வருடங்கள் எப்படி பிறந்தன என்பதற்கே ஒரு வேடிக்கையான கதை இருக்கிறது. நாரத முனிவருக்கு திடீரென்று ஒரு ஆசை ஏற்பட்டு அவர் மகாவிஷ்ணுவை நாடி 'உன்பால் எனக்கு மிகுந்த ஆசை இருக்கிறது. ''நீ ஆணுகவும் நான் பெண்ணுகவும் இருந்து இருவரும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்'' என்று சொல் கிறார்.

உடனே மகாவிஷ்ணுவும் சரி என்று ஏற்றுக் கொண்டு நாரதர் பெண்ணுக மாறினர். மகாவிஷ்ணு நாரதரைக் கூடினர். இருவருக்கும் அறுபது குழந்தைகள் பிறந்தன. அந்த அறுபது குழந்தைகள் தான் பிரபல, விபவ, சுக்கில பிரமோதுத, பிரஜோற்பத்தி, ஆங்கீரச, 'நீமுக, பவ, யுவ, தாது என்று தொடங்கி ரக்தாட்சி, குரோதன, அட்சய என்று முடிகின்ற அறுபது ஆண்டுகள் என்று எழுதி வைத்திருக்கின்றார்கள்.

இதிலே ஏதாவது ஒரு ஆண்டிற்கு தமிழ் பெயர் இருக்கிறதா என்று எண்ணிப்பாருங்கள்.

பிரபவ தமிழா? விபவ தமிழா?

தமிழா! இவையெல்லாம் தமிழா?

சுக்கில என்றுல் தமிழா? சுக்கில என்றுல் உடற்கூறு சாத்திரப்படி அர்த்தமே வேறு.

இவைகளெல்லாம் தமிழ் அல்ல. தமிழ் வருடக் கணக்கின்படி நான் பிறந்தது ரக்தாட்சி ஆண்டு. இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய வயது என்னவென்றுல் நான் இந்த உலகத்தை விட்டு மறைந்த பிறகு கூட இருபத்து நான்காம் ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரையிலே வாழ்ந்தேன் என்பதை சரியாகச் சொல்ல முடியும். இப்பொழுதுள்ள இந்த கி.மு., கி.பி. ஆண்டின் கணக்குப்படி.

ஆனல் தமிழ் ஆண்டு என்று சொல்லப்படுகின்ற இந்த சமஸ்கிருத பெயருடைய-நாரதர் பெற்ற பிள்ளைகள்

இருக்கிறார்களே அந்தப் பெயர்களைச் சொன்னால் நான் பிறந்தது ரக்தாட்சி ஆண்டு.

இதன்படி எனக்கு என்ன வயது என்று கேட்டால் ரக்தாட்சி, குரோதன, அட்சய இது முடிந்து ஒரு சுற்றுச் சுற்றி மறுபடியும் அட்சய வந்தால் அறுபத்தி இரண்டு ஆகும், ஆனால் சுற்று சுற்ற மறந்து விட்டால் எனக்கு வயது இரண்டு. எப்படி இரண்டு என்றால் இது அட்சய ஆண்டு. ரக்தாட்சியில் நான் பிறந்தேன். ரக்தாட்சி ஒரு வருடம், குரோதன ஒரு வருடம். எனவே எனக்கு வயது இரண்டு.

எனவே நீங்கள் இன்னும் சிந்தித்துப் பார்ப்பீர்களானால் ஒரு நாற்பது வயதுக்காரருக்கு பதினாலு வயது, ஐம்பது வயதுக்காரருக்கு பதினைந்து வயது, அறுபது வயதுக்காரருக்கு இருபது வயது என்றெல்லாம் இந்த அறுபது ஆண்டுகளிலே சுற்றிச் சுற்றி வருகின்ற காரணத்திலே சில சிக்கல்கள் ஏற்படக்கூடும்.

ஆனால் இந்த அறுபது ஆண்டுகள் நிறைந்த பஞ்சாங்கத்தை நான் குறை கூறுவதாக ஆத்திக நண்பர்கள் அல்லது வைதீகத்தில் பற்றுக் கொண்ட நண்பர்கள் தவறுகக் கருதக்கூடாது.

பஞ்சாங்கத்திலே வருகின்ற ராகுகாலம், குளிகை காலம் மற்றும் வேறுபல சகுனங்கள் இவைகளைப்பற்றி யெல்லாம் எனக்கு மாறுபட்ட கருத்து உண்டு. என் றாலும் கூட, பஞ்சாங்கம் என்பது தொன்மைக் காலத்திலே நம்முடைய நாட்டின் வான ஆராய்ச்சி வித்தகர் களெல்லாம் ஆராய்ச்சி செய்து, அன்றைக்கே இத்தனை கோள்கள் வான மண்டலத்திலே இருக்கின்றன என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இப்படி கண்டு பிடிக்கப்பட்ட கோள்களையெல்லாம் பெயரிட்டு அழைத்து, அந்தக்கோள்கள் எப்படிப்பட்ட பருவ நிலைகளை உலகத்தில் உருவாக்கும் என்பதை அறிந் திருக்கிறார்கள். இதன்படி பஞ்சாங்கத்தைப் பார்த்து

மழை வருகிறதென்று சொன்னால், வானிலையில் வருகிறதோ இல்லையோ பஞ்சாங்கத்தைப் பார்த்தால் நிச்சயம் மழை வருகிறதென்று எண்ணும் பொழுது நல்ல வான சாஸ்திரிகள் அந்தக்காலத்தில் இருந்திருக்கிறார்கள்.

இப்பொழுது ஒரு தேதியிலே சூரிய கிரகணம், சந்திர கிரகணம் என்று பஞ்சாங்கத்திலோ எழுதி வைத்தால் அவர்கள் குறித்தவாறு பஞ்சாங்கத்திலே இருப்பதைப் போல சூரியகிரகணம், சந்திரகிரகணம் எல்லாம் வருகிறது. ஆனால் அந்த அளவோடு இருந்தால்சரி! ஆனால் அவைகளை வைத்துக் கொண்டு ஒரு சிலர், நான் பஞ்சாங்கம் பார்க்கக்கூடியவன், நான் பஞ்சாங்கத்தைப் பார்த்து ஜாதகம் சொல்லக் கூடியவன், பஞ்சாங்கத்தைப் பார்த்து குறிப்பைச் சொல்லக்கூடியவன், பஞ்சாங்கத்தைப் பார்த்து இந்த நேரத்தில் இந்தக்காரியத்தை செய்யலாமா? செய்யக்கூடாதா? என்றெல்லாம் சொல்லக்கூடியவன் என்றெல்லாம் ஆரம்பித்துவிட்ட காரணத்தால்தான், ஒரு நல்லநோக்கத்தோடு தொடங்கப் பட்ட வானசாஸ்திர ஆராய்ச்சி எங்கேயோ பஞ்சாங்கத்திலே போய் முடிந்து, நம்மையெல்லாம் இன்னமும் பழமைவாதிகளாக, முற்போக்கு தடத்திலே காலடிஎடுத்து நடக்க முடியாத முடவர்களாக, மூடநம்பிக்கைச் சக்தியிலே வீழ்ந்து விட்டவர்களாக ஆக்கியிருக்கிறது என்பதை தயவு செய்து மறந்துவிடக் கூடாது.

இன்றைக்குக் கூட ராகு காலம் என்கிறோம். பகவத் கீதையிலே கண்ண பரமாத்மா "மாதங்களில் மார்கழியும் நானே!" என்று அர்ச்சுனனிடத்திலே சொல்கிறார். ஆனால் மாதங்களில் மார்கழி மாதம் தான் பீடை மாதம் என்று இங்குள்ள பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி முன்னுக்கு பின் முரணான பல காரியங்கள் ஏட்டில் வந்து விட்டன. காலையிலே எழுந்து, ஒரு முக்கியமான அலுவல் காரணமாக வெளியூருக்கோ வேறு

இடத்திற்கோ செல்ல வேண்டுமென்றால் பஞ்சாங்கத் தைப் பார்த்தால் மேற்கே சூலம்; கிழக்கே சூலம் என்று இருக்கும். சூலம் ஏதாவது தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் சூலம் என்று போட்டிருக்கும்.

அதற்கும் இந்த பஞ்சாங்கத்துக்காரர்கள் திறமையாக ஒரு யுத்தி செய்து வடக்கே சூலம் என்றால் கொஞ்சம் வெல்லம் சாப்பிட்டு விட்டுப் போனால் பரவாயில்லை; என்று அதற்கு ஒரு சாந்தி — எழுதி வைத்தார்கள்.

இப்படித்தான் ராகு காலத்தில் திருமணம் செய்து கொண்டால் அந்த மணமக்கள் நல்வாழ்க்கை வாழ மாட்டார்கள் என்றெல்லாம் பயமுறுத்தினர்கள். உலகத்திலே எத்தனையோ திருமணங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை நாலரை மணியிலிருந்து ஆறு மணி வரை நடந்து கொண்டுதானிருக்கின்றன. அவர் களெல்லாம் நல்வாழ்வு வாழ்ந்துகொண்டு தான் இருக் கிறார்கள். ராகுகாலத்தில் எத்தனையோ காரியங்கள் நடைபெறுகின்றன.

ஆனால், நமக்கே ஒரு எண்ணம் இப்படி ராகு காலத்தில் காரியங்கள் நடந்தால் இடைஞ்சல் வரும் என்று சொல்லியிருக்கிறார்களே — நாம் ஏன் அதை வேண்டுமென்றே எதிர்த்துச் செய்யவேண்டுமென்ற ஒரு எண்ணம் இளைஞர்கள் மனதில் கூட வந்திருக்கிறது என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தில் ஒரு திருமண விழாவிற்கு வருவதாக நான் ஒத்துக் கொண்டிருந்தேன். ஞாயிற்றுக்கிழமை மாலை திருமணம் நாலரையிலிருந்து ஆறு மணிக்குள் என்று திருமண அழைப்பிதழிலேயே போட்டிருந்தார்கள். முன்னாள் அமைச்சர் மன்னையும் நானும் வேறு பல நிகழ்ச்சி களுக்குச் சென்று விட்டு அந்த கிராமத்திற்கு ஆறேகால் மணிக்குச் சென்றோம். மணமகன் மிகுந்த கோபத்தோடு மணமேடைக்கு வர மறுத்து விட்டார். என்ன என்று

கேட்டால், ''நான் எவ்வளவு பாடுபட்டு ராகுகாலத்தில் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று என்னுடைய பெற்றோர், உற்றார் உறவினரையெல்லாம் சமாதானப் படுத்தி நாலரை மணிக்குமேல் ஆறு மணிக்குள் திருமணத்தை நடத்திக் கொள்ள இருந்தேன். அதை தடுத்து விட்டீர்களே!'' என்று சொல்லி மேடைக்கு வர மறுத்து விட்டார்.

பிறகு அவரை சமாதானம் செய்து மேடைக்கு அழைத்து வரச்சொல்லி நான் பேசினேன். ''நீ சொல்வது படி பார்த்தால் நாலரை மணியிலிருந்து ஆறு மணி வரை ராகுகாலம் இருக்கிறது என்பதை நீ ஒத்துக் கொள்கிறாயா? ஒத்துக்கொண்டால்தானே அந்த நேரத்தில் வைக்க வேண்டும் என்று விரும்புகிறாய்'' என்று நான் சொன்னேன்.

எனவே ராகுகாலம், குளிகை காலம், எமகண்டம் இவைகளெல்லாம் பஞ்சாங்கத்திலே இடம் பெற்றிருப்பவை. அந்தக்கால வான சாஸ்திரத்திலே கண்டு பிடிக்கப்பட்ட கோள்களின் அசைவு, இயக்கம் இவைகளுக்கு கிடைத்த அந்தப் பெருமையைப் போல பெருமை உடையவை அல்ல. இது பாமர மக்களை ஏழை எளிய மக்களை சில எத்தர்கள் ஏமாற்றுவதற்காகப் செய்யப் பட்ட ஏற்பாடே தவிர வேறல்ல. எனவே இந்த காலங்களைப் பார்க்கத் தேவையில்லை.

ஆண்டவன்தான் உலகத்தைப் படைத்தான்; கடலைப் படைத்தான்; நிலவைப் படைத்தான்; நேரத்தைப் படைத்தான்; நாழிகையைப் படைத்தான் என்று சொல்லும் போது அவன் படைத்த நேரத்திலே கெட்ட நாழிகை, நல்ல நாழிகை என்றெல்லாம் பேதப் படுத்தியா பார்க்க வேண்டும்? எல்லா நேரமும் நல்ல நேரம்தான். நல்ல காரியம் நடைபெற்றால் அது நல்ல நேரம். கெட்ட காரியம் நடைபெற்றால் அது கெட்ட நேரமே தவிர இத்தனை மணிக்கு நல்ல நேரம்—

இத்தனை மணிக்கு கெட்ட நேரம் என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

எனவேதான் அந்த பஞ்சாங்கத்தின் அடிப்படையில் அறுபது ஆண்டுகள் என்கின்ற தமிழ் வருடங்கள் என்று சொல்லப்படுகின்ற சமஸ்கிருதப் பெயர் உள்ள வருடங்களை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

நீங்கள் கேட்கலாம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து என்று பத்திரிகைகளில் செய்தி வழங்குகிறுயே — அதை ஏற்றுக் கொண்டுதானே என்று கேட்கலாம். நான் வழங்கிய புத்தாண்டு வாழ்த்தைப் படித்துப்பாத்தால் எந்த ஆண்டும் 'தமிழ்ப் புத்தாண்டு' என்ற வார்த்தையையே நான் பயன்படுத்தியிருக்க மாட்டேன்.

''சித்திரை முதல் நாள் இன்று'' என்றுதான் தொடங்கியிருப்பேனேயல்லாமல், இந்த பன்னிரண்டு மாதங்களும் உலகம், நமது நாடு, நமது இனம் எப்படியெல்லாம் வாழவேண்டும் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற ஆசையைத் தெரிவித்திருப்பேனேயல்லாமல் தமிழ்ப் புத்தாண்டு என்பதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

இப்படிச் சொல்கின்ற காரணத்தால் பத்திரிகைக் காரர்கள் ''தமிழ்ப் புத்தாண்டை கருணநிதி ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று ஒரே வரியில் போட்டு விடக் கூடாது என்னென்ன விளக்கம் சொன்னேன் என்பதையும் போடவேண்டும்.

ஆக, எதுவும் இல்லாததற்கு இதாவது இருக்கட்டுமே என்று ஏற்றுக்கொண்ட ஒன்றுதான் தமிழ்ப் புத்தாண்டு என்ற ஒன்றை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறுமேமேயல்லாமல் வேறல்ல.

அந்த வகையிலே இந்த தமிழ்ப் புத்தாண்டினை ரிசர்வ் வங்கியின் தமிழ்மன்ற நண்பர்கள் கொண்டாடி அதற்கு என்னையும் அழைத்து விழா நிகழ்ச்சியின்

தொடர்பாக புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாளையும் இணைத்து அவருடைய எழுச்சிமிக்கக் கவிதைகள் — உவமை நயம் பொருந்திய கவிதைகள் — உண்மையை ஒளிவிட்டுக் காட்டுகின்ற கவிதைகள் நம்முடைய சமுதாயத்திற்கு எந்த வகையில் எல்லாம் பயன்பட்டது என்பதை எடுத்துக்கூறுகின்ற வாய்ப்பையும் எனக்கு வழங்கியிருக்கின்றீர்கள்.

''புதியதோர் உலகம் செய்வோம்
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!''

என்று பாடினர். பாரதிதாசன்! இன்றைய தினம் பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளையெல்லாம் பார்த்தால் பாரதிதாசனுடைய பாடல் இப்போதும் எவ்வளவு பொருந்துகிறது என்பதை உணர முடியும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தொடக்கக் காலத்திலே ஒரு பள்ளி ஆசிரியராக பாண்டிச்சேரியிலே தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தவர் என்றாலும், ஆரம்ப காலத்திலே கவிஞராக வேண்டும் என்ற ஆசை எழுந்த போது அவர் எழுதிய பாடல்கள் 'சுப்பிரமணியர் துதியமுது'. 'கதர்ப்பாட்டு' என் றெல்லாம் இருந்தாலும் கவிச்சக்ரவர்த்தி பாரதியாரின் நட்பும் நெருக்கமும் ஏற்பட்ட பிறகு,

''எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழு கடல் அவள் வண்ணமடா''

என்கின்ற அந்த எழுத்தாரத்தை பாடிகாட்டி பாரதியாரின் அன்பையும் பாராட்டையும் பெற்றார்.

அதற்குப் பிறகு அவர் தமிழுலகிற்கு அறிமுகமாகி அறிமுகமானாலும் கூட குடத்துக்குள்ளே இருக்கின்ற விளக்காக புதுவை மாநிலத்திற்குள்ளே இருந்தார்கள். அவரது கவிதைகள் புரட்சிகரமான சிந்தனைகளை ஏந்தி வந்த காரணத்தினால் பேரறிஞர் அண்ணா அவர்களின் கண்களிலே அந்த கவிதைகள் பட்டு முத்தமிழ்க் காவலர் கி.ஆ பெ. விசுவநாதம் போன்றவர்களெல்லாம்

அவருடைய கவிதைகளின் மதிப்பை மேடைக்கு மேடை பேசி; அண்ணு அவர்கள் 'திராவிட நாடு; இதழில் ஒவ்வொரு வாரமும் அவருடைய கவிதைகளை எடுத்து எழுதி 'புரட்சிக்கவிஞர் என்கின்ற பட்டம்தானுக அவரைப்போய்ச் சேருகின்ற அளவுக்கு புரட்சிகரமான கருத்துக்களை இந்த நாட்டிற்குத் தந்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.

அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு எனக் கெல்லாம் நிரம்பக் கிடைத்திருக்கின்றது. அவர் நான் எழுதிய நாடகங்களுக்குத் தலைமை வகித்திருக்கிறார், நான் எழுதிய கட்டுரைகளைப் படித்துப்பார்த்து பாராட்டியிருக்கிறார்.

நான் முதன் முதலாக திருவாரூரில் 'தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றம்' என்கின்ற அமைப்பை உருவாக்கி அதனுடைய ஆண்டு விழாவை நடத்திய போது அதற்கு வாழ்த்து வழங்கியிருக்கின்றார்;

"தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றங்காண்!
வண்மையொடும் உண்மையொடு வாழ்த்திடுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங்காண்!
கிளம்பிற்றுக்காண் தமிழச்சிங்கக்கூட்டம்
கிழித்தெறிய தேடுதுகாண் பகைக்கூட்டத்தை
வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழரல்லார்
வால்நீட்டினுல் உதைதான் கிடைத்திடுங்காண்!"

என்று எங்களுக்கு வாழ்த்து அனுப்பினர்:

இன்றல்ல; 1942ம் ஆண்டு பாரதிதாசன் எழுதிய கவிதை. மக்களுடைய எழுச்சிக்கு மாணவர்களே! நீங்களெல்லாம் மருந்தாக இருக்க வேண்டும். அவர்கள் இன்றைக்கு விசையொடிந்த தேகம் படைத்தவர்களாக இருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு நல்ல டானிக்காக மருந்தாக மாணவர்கள் உருவாக வேண்டும்; மாணவர்

களுள் எழுச்சி அந்த வகையிலே ஏற்பட வேண்டும் என்று எழுதியனுப்பினர் பாரதிதாசன்.

அவருடைய கவிதைகள் இன்றைக்கு மலைமலையாகக் குவிந்திருக்கின்றன. அவருடைய கவிதைகள் உவமை நயத்தோடு விளங்குகின்றன. அவருடைய கவிதைகள் எரிமலைகளாக வெடிக்கின்றன. அவருடைய கவிதைகள் தென்றலாக மலர்மணம் கமழ்ந்து வீசுகின்றன. அவருடைய கவிதைகள் புயலாக உருவெடுக்கின்றன. அவருடைய கவிதைகள் பூகம்பமாக சில நேரங்களில் உறுமுகின்றன. அப்படிப்பட்ட கவிதைகளுக்கெல்லாம் சொந்தக்காரர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பாரதியாருக்குப் பிறகு பாரதிதாசனுக்குப் பிறகு எத்தனையோ கவிஞர்கள் வந்திருக்கிறார்கள் என்றாலும் பாரதிதாசனுக்கு ஈடு, பாரதிதாசனேதான்!

பாரதிதாசனின் உவமையழகுக்கு ஒரு எடுத்துக் காட்டு சொல்லவேண்டுமேயானால், பொழுது விடிவதைப் பற்றி அவர் சொல்கிறார். இப்பொழுது கூட தமிழ் நாட்டில் பொழுது விடிந்து கொண்டிருக்கிறதல்லவா? பொழுது விடிவது எப்படி இருக்கிறதாம் தெரியுமா?

> "தொட்டி நீலத்தில் சுண்ணும்பு கலந்த கலப்பன்ன
> இருள்தன் கட்டுக்குலைந்தது"

என்று கூறுகிறார்.

தொட்டியிலே நீலவண்ணம் கரைத்து வைக்கப் பட்டிருக்கிறது. அதிலே கொஞ்சம் கொஞ்சமாக சுண்ணும்பை கலந்து கொண்டேயிருந்தால் அந்த நீல வண்ணத்தின் தாக்கம் குறைந்து சுண்ணும்பின் வெண்மை வண்ணம் அந்தத் தொட்டியிலே பரவ ஆரம்பிக்கிறதாம். அதைப்போல காலையிலே வைகறை வருகிறதாம். சூரிய உதயத்திற்கு முன் வருகின்ற அந்த வைகறையை பாரதிதாசன் இப்படி குறிப்பிடு கின்றார்.

இருள் விலகியது என்பதை 'இருள் கட்டுக் குலைந்தது' என்கிறார். இருள் கட்டுக் குலைந்தது என்பது சாதாரண மானதல்ல. கம்பீரமாக ஆஜானுபாகுவான தோற்றத் துடன் இருக்கின்ற ஒருவன் கொஞ்சம் கொஞ்சமாக இளைத்து துரும்பாகி கட்டுக் குலைந்து போனால் பிறகு அவன் கம்பீரமாகக் காணப்படமாட்டான். அதைப் போலத்தான் இருள் கட்டுக் குலைந்து போய்விடுகிறது என்கிறார்.

இன்னொன்று; ஏற்றத் தாழ்வைப் பற்றி அவர் பேசுகின்ற நேரத்தில் அது எப்படிக் கொடுமையானது என்பதை, ஒரு மன்னன் மகளுக்கும் கவிஞனுக்கும் ஏற்பட்ட காதலை மையமாக வைத்து கூறுகிறார். தான் காதலிக்கும் மன்னன் மகளிடம் அந்த கவிஞன் ''இந்த காதலை உன்னுடைய தந்தை—வேந்தர் ஒத்துக் கொள்ள மாட்டார்'' என்று சொல்கிறான். எப்படிச் சொல்கிறான் தெரியுமா?

''குன்று போல் அன்னம் குவித்திருக்கும் தென்னெதிரில்
உண்ணமுடியாமல் ஊராள்வான் கூர்வாளும்—அவன்
வண்ணமுடி செல்வாக்கும் வந்து மறிக்குதடி''

என்கிறான். குன்றுபோல அன்னம் குவித்து வைக்கப் பட்டிருக்கிறதாம். நல்ல பசி அவனுக்கு, ஆனாலும் அந்த அன்னத்தை உண்ண முடியாமல் ஊராள்வாரின் கூர் வாளும் வண்ணமுடி செல்வாக்கு வந்து மறிக்கிறதாம்! இது செல்வாக்கின் காரணமாக ஏற்படுகின்ற தடை. அடுத்து சாதியின் காரணமாக ஏற்படுகின்ற தடையையும் சாடுகிறார் பாரதிதாசன்.

''காதல் நெருப்பால் கடலுன்பால் தாவிடுவேன்
சாதி எனும் சங்கிலி என் தாளைப் பிணைத்ததடி'!

என்கிறார். காதல் நெருப்புப் பற்றி எரிகிறதாம், அதை அணைக்க கடலில் தாவலாம் என நினைத்தால் சாதி யாகிய சங்கிலி கால்களை பிடித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அப்படி தாவமுடியாமல் தடுக்கிறதாம்.

சாதிச்சங்கிலி என் காலே பிணைத்திருக்கின்ற காரணத்தால் இந்த காதல் நெருப்பிலிருந்து விடுபட கடலாக இருக்கின்ற பெண்ணே-உன் மீது தாவ முடியவில்லே என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒரு காதல் காவியத்தின் மூலமாக சாதியைச் சாடுகின்றார்.

நிலவைப் பற்றி யார் யாரோ பாடியிருக்கின்றார்கள். நிலவைப் பற்றி எழுதாத கவிஞர்கள் இல்லே. ஆனல் நிலவைப்பற்றிய பாரதிதாசனின் நோக்கே வேறு. நிலவைப் பார்த்து அவர் பாடுகிறார்.

''நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளேயிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலேயிலே பூத்த தனிப் பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப்பாற்குடமோ? அமுத ஊற்றோ
காலே வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ?''

நீலவானம் என்னும் ஆடைக்குள் உடலே மறைத்துக் கொண்டு நிலாவென்று ஒளிமுகத்தைக் காட்டுகிறாய். உன் உடல் முழுவதையும் காட்டினுல் இந்த உலகம் காதல் நோயிலே செத்துப் போய்விடும் என்ற பயத்தால் முகத்தை மட்டும் காட்டுகிறாயா?—என்று பாரதிதாசன் கேட்கிறார்.

அது மாத்திரமல்ல; நிலவு எப்படி வருகிறதாம்? அவரது கற்பனையைப் பாருங்கள். விஞ்ஞானத்திற்கு ஏற்றதாக இல்லாவிட்டாலும் கற்பனை எப்படி ஆழமாக வருகிறது என்பதைப் எண்ணிப் பார்க்க வேண்டும். காலேயில் உதித்த சூரியன் கடலில் விழுந்து குளிரடைந்து ஒளிப்பிழம்பாக—நிலவாக வந்திருக்கிறதோ என்று கேட்கிறார்.

இப்படி வர்ணிப்பதாக இருந்தாலும் உவமை கூறுவதாக இருந்தாலும் புரட்சிக் கவிஞர்—பாரதிதாசனுக்கு

இணை—புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே தவிர வேறு யாருமல்ல. இதைத்தான் 'திராவிடநாடு' இதழிலே அண்ணு அடிக்கடி சுட்டிக் காட்டினர்.

பரரதிதாசனின் நூல் ஒன்றுக்கு முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஒரு அணிந்துரை வழங்கி யிருந்தார். தொடக்க காலத்து நூல். நாங்களெல்லாம் பழைய ஆட்கள். அதனுல் அந்த நூலைப் பற்றி யெல்லாம் தெரியும். அந்த நூலுக்கு கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதியிருக்கிற அணிந்துரையில், ''கவிதைக்காக ஒரு முறை படித்தேன். அழகுக்காக ஒரு முறை படித்தேன், உவமைக்காக ஒருமுறை படித்தேன். கதைக்காக ஒருமுறை படித்தேன். எழுத்தின் எளிமைக்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு முறையும் அது படித்தே னுகவே சுவைக்கிறது'' என்று பாரதிதாசனை பாராட்டி யிருக்கிறார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்கு ஒரு பொற்கிழி வழங்க வேண்டுமென்று அண்ணு அவர்கள் எண்ணி திட்டமிட்டு, பாரதிதாசனுக்கு பொற்கிழி அளிக்கின்ற அந்த விழாவிலே அண்ணு என்றைக்கும் அணியாத பட்டுச்சட்டையும் பட்டுவேட்டியும் அணிந்து கொண்டு வந்திருந்தார்.

வழக்கமாக அண்ணு அவர்களின் ஆடை வெண்மை யாகக்கூட இருக்காது. அழுக்கேறியிருக்கும். ஆனல் பாரதிதாசனுக்கு பணமுடிப்பு வழங்குகின்ற விழாவுக்கு பட்டுச்சட்டை, பட்டுவேட்டி, பட்டுத்துண்டு இவைகளை யெல்லாம் அணிந்து மேடைக்கு வந்து பாரதிதாசனுக்கு பணமுடிப்பு தரும்போது பேசினர். ''என்னுடைய மண விழாவிலேதான் நான் பட்டாடை அணிந்தேன். அதற்கு அடுத்த விழா — மகிழ்ச்சியான விழா பாரதிதாசனுக்கு பணமுடிப்பு வழங்குகின்ற விழாதான். அதனல் பட்டுச் சட்டை அணிந்திருக்கிறேன்'' என்று சொன்னர்.

பணமுடிப்பை வழங்கும்போதுகூட அண்ணு அவர்கள் பாரதிதாசனைப் பார்த்து, "நீங்கள் கையை நீட்டி-நான் கொடுப்பதாக இருக்கக்கூடாது. நீங்கள் தாழ்ந்தும் என் கை உயர்ந்தும் இருக்கக்கூடாது. எனவே கையிலே வைத்துக் கொண்டிருக்கிறேன். எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அண்ணு சொன்னார்.

அந்த அளவுக்கு ஒரு புலவருக்கு இந்த இயக்கம்—இந்த இயக்கத்தின் தலைவர் அண்ணு பெருமை அளித்தார். புலவர்களுக்கு பெருமை அளிப்பது என்பது இன்று நேற்றல்ல.

சங்ககாலத்திலேகூட முரசுக்கட்டிலிலே படுத்துத் தூங்கிவிட்ட மோசிகீரனார் என்ற புலவருக்கு மன்னன்-முரசுக் கட்டிலிலே படுப்பது பெருங்குற்றம். அவனுக்கு மரண தண்டனை தரலாம் என்றுலும்கூட—படுத்திருப்பவர் புலவர் என்ற காரணத்தால் கையிலே விசிறி கொண்டு அந்த மன்னன் விசிறிக்கொண்டிருந்தான் என்று சங்க இலக்கியம் சொல்கிறது.

அப்படி புலவர்களுக்கு அறிஞர்களுக்கு பெருமை யளித்தது நம்முடைய இனம்; நம்முடைய நாடு அந்த வகையிலே தான் அண்ணு அவர்களும் பாரதிதாசனுக்கு பெருமையை அளித்தார்.

பாரதிதாசன் எதையும் பாடாமல் விட்டதில்லை. மிகப் பெரும் பிரச்சினையாக விவாதிக்கப்பட்டது கடவுள் கொள்கைதான். பெரியார் 'கடவுளே இல்லை' என்ற வாதத்தை எடுத்து வைத்த நேரத்தில் "கடவுள் உண்டு" என்றுவேறு சிலர் வாதிட்டார்கள். பாரதிதாசன்,

உண்டென்பார் சிலர்;
இல்லையென்பார் சிலர்;
எனக்கில்லை கடவுள் கவலை!

என்று ஒரே வரியில் சொல்லிவிட்டுப்போய் விட்டார். எனக்கு கடவுளைப் பற்றி கவலையில்லை. வேண்டு

மானுல் அவர் என்னைப்பற்றி கவலைப்படட்டும் என்று பாடியிருக்கிறார்.

அதே வேகத்தில் பக்திப் பாடல்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்களே—அவர்களைப் பார்த்து

''மாடுகளும் வழக்கத்தால் செக்கைச்சுற்றும்
மடையர்களும் இயற்றுவார்கள் கடவுள்பாடல்''

என்று வேகமாகவே கடிந்து கொண்டார் அவர்.

கடவுள் பாடல் இயற்றுவதைக்கூட அவர் குற்றமாகச் சொல்லவில்லை. உலகத்திலே எவ்வளவோ சொல்ல வேண்டியிருப்பதைப் பற்றியெல்லாம் சொல்லாமல் கடவுள் பாட்டையே திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருக்கிறார்களே! தேவாரம் இல்லையா? திருவாசகம் இல்லையா? திருப்பாவை இல்லையா? திருவெம்பாவை இல்லையா? தாயுமானவர், பட்டினத்தார் போன்றவர்களின் பாடல்கள் எல்லாம் இல்லையா? அவையெல்லாம் இருக்கும்போது அரைத்த மாவையே அரைக்கிறார்கள் என்ற கவலையில்தான் 'செக்கைச் சுற்றி வரும் மாடுகளைப் போல கடவுள் பாட்டை பாடிக்கொண்டிருக்கிறீர்கள். வேறு பாதைக்கு வாருங்கள்'' என்று பாரதிதாசன் கவிஞர்களையெல்லாம் அழைக்கிறார்.

அப்படி அவர் அழைத்த காரணத்தால்தான் அவர் மிகத் தெம்போடு நிமிர்ந்து சொன்னர்.

''நடவுசெய்த தோழர்கூலி
நாலணுவை ஏறபதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்''

என்று புரட்சிக் கவிஞர் பாடினர். அது மாத்திரமல்ல. உலகம் என்கின்ற முதலாளியை பகுத்தறிவு மன்றத்தில் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்திக் கேள்விகள் கேட்டு ''ஏ உலகமே! உன்னில் எல்லோரும் சமம்தானே ! சிலருக்கு ஆயிரம் ஏக்கர் நிலம் ; சிலருக்கு ஐநூறு ஏக்கர் நிலம் ; பலருக்கு நிலமே இல்லாத நிலை ஏன்? சிலருக்கு பஞ்சம்-சிலருக்கு மலர் மஞ்சம் எதற்காக? என்ற கருத்துப்பட கேள்விகளைக் கேட்டு இதற்கெல்லாம் ஒரே வழி.

''ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பா நீ!''

என்று பூகம்பத்தைப் போல் இமயமலையைப் போல் வெடித்துக் காட்டியவர் பாரதிதாசன்.

போராடுகின்ற உலகம் வேண்டாம்; சாந்தியால் உலகம் தழைத்திட வேண்டும் என்ற அந்தக் கருத்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு நிரம்ப உண்டு.

அதனால் தான்,
''கெட்ட போரிடும் உலகத்தை
வேரோடு சாய்ப்போம்''
என்று சொன்னார்.

இன்றைக்கு ஆள்பலம், அதிகாரபலம், ஆயுதபலம், இவையெல்லாம் இருக்கின்ற காரணத்தாலே தான் சுமார் முப்பது லட்ச மக்களைக் கொண்ட லிபியா நாட்டு மீது அமெரிக்க முதலாளி படையெடுக்க முடியும் என்று கருதுகிறான்; படையெடுப்பென்றால்; லிபியாவின் கப்பலையோ விமானத்தையோ — லிபியா நாட்டிலுள்ள சில நகரங்களையோ தாக்கினார்கள் என்றல்ல. குறிபார்த்து லிபியாவின் அதிபர் கடாபி வாழ்கின்ற மாளிகையிலேயே குண்டு போட்டிருக்கிறார்கள். சற்றுத் தவறிய காரணத்தால் அந்த நாட்டு தலைவன் இன்றைக்கு தலைதப்பி

யிருக்கிறார் என்பதை எண்ணும்போது ஒரு பெரிய நாடு உலகத்திலே உள்ள வல்லரசுகளிலே ஒன்று தன்னுடைய பகை ஒன்றை வீழ்த்துவதற்காக தன்னிடத்திலுள்ள நவீன போர்க் கருவிகளைக் கொண்டு விமானங்களை அனுப்பி லிபியா அதிபர் மாளிகை மீதே குண்டு வீச்சு நடத்தி அதில் பதினறு மாத குழந்தை உயிரிழந்திருக் கிறது என்றால்,

அமெரிக்கா என்ன தான் நியாயமான காரணங்களை கூறினாலும் லிபியா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இப்படிப்பட்ட நிலைகள் உலகத்தையே போர் முனையில் கொண்டு வந்து நிறுத்திவிடுமோ என்ற ஐயப்பாடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவது உலக யுத்தம் எப்படி ஆரம்பமானது? சிறிய சிறிய காரணங்களால்தான் அன்றைக்கு ஆரம்ப மானது. போலந்தை முதலில் பிடித்தார்கள். அபிசீனி யாவை முசோலினி பிடித்தான். அதற்குப் பிறகு இங்கிலாந்து மீது பிரான்சு மீது பாய்ந்தது. அதைத் தொடர்ந்து உலக யுத்தம் மூண்டது. ஹிரோஷிமாவிலே அணுகுண்டு போடப்பட்ட பிறகு அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. லட்சக்கணக்கான பேர் செத்தார்கள் ஜெர்மனியிலே தொழில் நடத்துவதற்குக் கூட ஆட்களே இல்லாமல் போய் விட்டது. அந்த அளவிற்கு மக்கள் படுநாசம் அடைந்தார்கள்.

அதைப் போல, ஒரு சிறு பொறி பெருந்தீயாக மாறக் கூடிய அளவிற்கு இன்றைக்கு லிபியாவிலே நடைபெறு கின்ற இந்தக் காரியம் நாளைக்கு உலக போராக மூண்டு விடுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதற்கு அமெரிக்காதான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய குற்றச்சாட்டுக்கு உள்ளாக வேண்டிய சூழ்நிலையிலே-இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

''தென்திசையைப் பார்க்கின்றேன்!
என் சிந்தையெல்லாம்
தோள்களெல்லாம் பூரிக்குது அடடா!''

என்று பாடினர்.

தென்திசையைப் பார்த்தாராம். அவரது சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்கின்றதாம் எதற்காகத் தெரியுமா?

தென் திசையிலே உள்ள இலங்கையை இராவணன் ஆண்டானும் அப்படிப்பட்ட இராவணனை

''குன்றெடுக்கும் நெடுந்தோளான் கொடை கொடுக்கும் கையான்''

என்றெல்லாம் புகழ்ந்து விட்டு

''வஞ்சக விபீஷணனை தம்பியாகப் பெற்ற மாபழிக்கே அஞ்சுகின்றான்'' என்று இராவணனைச் சொல்லி அந்த இராவணன் வாழ்ந்த இலங்கையைப் பார்த்து சிந்தையும் தோள்களும் பூரிக்குது என்று பாடினர்.

இலங்கையைப் பார்த்து அப்படி இன்றைக்கு பாட முடியுமா?

தென்திசையைப் பார்த்தால் தோள்கள் பூரிக்கின்றதா?

இல்லை. நம்முடைய தோள்கள் தொய்ந்து போய்க் கிடக்கின்றன. தென் திசையைப் பார்த்து நம்முடைய கண்கள் குளமாகின்றன. லிபியாவுக்காக இந்தியாவிலே கண்ணீர் விடுகிறவர்கள் பக்கத்திலே இலங்கையிலும் குண்டுதான் விழுகிறது. அதற்கு கண்ணீர் விடத் தயங்குகிறார்கள்.

லிபியாவுக்காக கண்ணீர் விடுகின்றவர்கள் — வாதாடுகிறவர்கள் இலங்கைக்காகவும் வாதாட வேண்டும் என்று கேட்பது எப்படித் தவறுகும்?

எனவே புத்தாண்டு விழா கொண்டாடுகிற நேரமாக இருந்தாலும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகிற நேரத்திலும் நமக்கு வரவேண்டிய உணர்வு வந்தாக வேண்டும்.

அந்த உணர்வு நாம் வாழ்கிற உணர்வு, நம்முடைய வீடு நலமாக இருக்கின்ற உணர்வு, நம்முடைய பக்கத்து தெரு நலமாக-வளமாக இருக்கின்ற உணர்வு என்றில்லாமல் நமது இனம் இலங்கையில் அழிந்து கொண்டிருக்கிறதே—அந்த இனத்தைக் காப்பாற்றுகின்ற உணர்வாகவும் ஏற்படவேண்டும். அந்த உணர்வை ஏற்படுத்திக் கொள்ள நாமனைவரும் இந்தநாளில் சூளுரை மேற்கொள்வோம்.

★

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

V 28